வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்

Email : news@eelanadu.lk
மலர் : 05
09.06.2024 ஞாயிற்றுக்கிழமை
இதழ் : 161
பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# சீன கடலட்டை பண்ணைகளால் வடக்கு மீனவர்களுக்கு பாதிப்பு

## சுவிஸ் பொருளாதார மாநாட்டில் சிறீதரன் சுட்டிக்காட்டு

பேர்ண், ஜூன் 09

**சீனா நாட்டின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்ற கடல் அட்டைப் பண்ணைகள் புதிய புதிய தாக்கங்களை உருவாக்கியுள்ளன. இது வருமானம் கூடிய துறையாக இருப்பினும் கடற்றொழில் துறையிலே மிகப்பெரிய தாக்கத்ததை ஏற்படுத்துகின்றது என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சுட்டிக் காட்டியுள்ளார்.**

சுவிற்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெறும் தமிழர் பொருளாதார மாநாடொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.


அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

தங்களுடைய கடற்றொழில் துறையிலே புதிய கண்டுப்புடிப்புகளை அல்லது தேடல்களை கண்டறியாத வடக்கு கிழக்கு கடற்றொழிலாளர்கள் மிகப் பெரிய நெருக்கடிகளை சந்தித்துள்ளனர்.

குறிப்பாக பருத்தித் துறையிலும் மன்னாரிலும் களமுனைகளில் உற்பத்தியாகின்ற மீனினுடைய உற்பதி முறைகளும் கூட மெல்ல மெல்ல வீழ்ச்சியடைந்து செல்வதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சீனா நாட்டின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்ற கடல் அட்டைப் பண்ணைகள் புதிய புதிய தாக்கங்களை உருவாக்கியுள்ளன. இது வருமானம் கூடிய துறையாக இருப்பினும் கடற்றொழில் துறையிலே மிகப்பெரிய தாக்கத்ததை ஏற்படுத்துகின்றது. இது தடுக்கப் படவேண்டும்.

இதனால் எமது கடற்றொழிலாளர்கள் பெரும் இடர்களை எதிர்நோக்கியுள்ளனர் - என்றார். (அ)



# இந்தியப் பிரதமராக மோடி இன்று மீண்டும் பதவியேற்பு

## ரணில் உட்பட 7 அயல் நாடுகளின் தலைவர்கள் விழாவில் பங்கேற்பு

டில்லி, ஜூன் 09

இந்தியாவில் 2024 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்று முடிந்த நிலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7: 15 மணிக்கு ஜனாதிபதி மாளிகை வளாகத்தில் மீண்டும் பிரதமராகும் நரேந்திர மோடி மற்றும் அவரது அமைச்சரவை உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி திரௌபதி முர்மு பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார்.

மோடியின் பதவியேற்பு விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்ஸூ, சிசல்ஸ் துணை ஜனாதிபதி அகமது அபிப், மொரீஷியஸ்

15

# 31 கிலோ கஞ்சாவுடன் மணல்காட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 09

பருத்தித்துறை-மணல்காட்டில் 31 கிலோ கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய குறித்த கைது நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மணல்காட்டுப் பகுதியைச் சேர்ந்த 31 வயதானவரே இவ்வாறு பருத்தித்துறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# ஐ.நா. பொருளாதார, சமூக சபைக்கு மீண்டும் தெரிவாகியுள்ளது இலங்கை

கொழும்பு, ஜூன் 09

ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக சபைக்கு மீண்டும் இலங்கை தேர்வு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நியூயோர்க்கில் இடம்பெற்ற வாக்கெடுப்பின்போது இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலதிகமாக 07 வாக்குகள் கிடைக்கப் பெற்று இலங்கைக்கு மொத்தமாக 182 வாக்குகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக சபைக்கு இலங்கை தேர்ந்தெடுக்கப்பட்டது.

சபையின் உறுப்பினராக, வறுமை ஒழிப்பு, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாலின சமத்துவம் உள்ளிட்ட திட்டங்களுக்கு இலங்கை பங்களிப்பதாக வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# இன்று டில்லி செல்கிறார் ரணில்

கொழும்பு, ஜூன் 09

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இன்று மூன்றாவது முறையாக பிரதமராக பதவியேற்கவுள்ளார். மோடியின் பதவியேற்பு விழாவில் பங்கேற்பதற்காக இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

19

# மக்களின் பேராதரவோடு சஜித் ஆட்சியில் அமர்வார்

## ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 09

மக்களின் பேராதரவோடு சஜித் பிரேமதாச ஜனாதிபதி ஆசனத்தில் அமர்வார் என ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவு சஜித்

15



# ஏ.ஐ. தொழிநுட்பத்தை பயன்படுத்தி டான் ரிவியில் செய்தித் தொகுப்பு!

கொழும்பு, ஜூன் 09

இலங்கை தனியார் தொலைக்காட்சி சேவை வரலாற்றில் முற்தடவையாக டான் செய்தித்தொலைக்காட்சியின் மக்கள் குரல் செய்தித்தொகுப்பு செயற்கை நுண்ணறிவு தொழிநுட்பத்தை (ஏஐ) பயன்படுத்தி தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.

இந்த விசேட மக்கள் குரல் தொகுப்பு டான் செய்தித் தொலைக்காட்சியின் இரவு 9 மணி செய்தியில் நேற்று இரவு ஒளிபரப்பட்டது.

டான் ரிவியில் முன்னர் பணியாற்றிய தக்சா குணராசா கேசவன் செய்தித் தொகுப்பை வழங்குவதுபோல செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் அது தயாரிக்கப்பட்டிருந்தது. (அ)

# சம்பந்தனும் சுமந்திரனும் தமிழினத்தின் துரோகிகள்!

## ரோஹித எம்.பி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 09

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களான இரா.சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரனும் தமிழினத்துக்குத் துரோகம் செய்தவர்கள் என பொதுஜன பெரமுனவின் தேசிய ஏற்பாட்டாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களிடம்

15

# மோடியின் வெற்றியால் இலங்கைக்கும் நன்மை!

## கூறுகிறார் உதய கம்மன்பில

கொழும்பு, ஜூன் 09

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வெற்றி இலங்கைக்கு சாதகமாக அமையும் என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

15

# ரணிலை ஆதரிக்க பசிலை சந்தித்த சம்பிக்க ரணவக்க?

கொழும்பு, ஜூன் 09

பொதுஜன பெரமுனவின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவுக்கும் ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் சம்பிக்க ரணவக்கவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வாரத்தின் ஆரம்பத்தில் இந்த சந்திப்பு இடம் பெற்றதாகவும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவை சில தினங்களுக்கு

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளுடன் சிறை அதிகாரி கைது!

கொழும்பு, ஜூன் 09

போதைப்பொருள் கடத்திய சிறைச்சாலை அதிகாரி ஒருவர் நேற்றுப் பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் 15 கிராம் ஐஸ் போதைப்பொருளை கொண்டு செல்லும்போது நிவித்திகல பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர் வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனையில் பணிபுரியும் ஜெயிலர் என தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினபுரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கபில பிரேமதாஸவுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் ஐஸ் போதைப் பொருளுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த சந்தேகநபர், இரத்தினபுரி - கலவானை பிரதான வீதியில் கெட்னிவத்தையில் பொலிஸ் வீதித்தடையைப் பயன்படுத்தி கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் சிறைச்சாலை அதிகாரியாக கடமையாற்றி சில காலமாக ஐஸ் போதைப் பொருளை கடத்தி வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# விஜயதாஸ ராஜபக்ஷமீது ஒழுக்காற்று நடவடிக்கை?




கொழும்பு, ஜூன் 09

**வேறு ஓர் அரசியல் கட்சியின் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டதற்கு எதிராக விஜயதாஸ ராஜபக்ஷ மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க கட்சியின் அரசியல் குழு தீர்மானித்துள்ளதாக சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

இந்த விடயம் முதலில் ஒழுக்காற்று சபைக்கு அனுப்பப்பட்டதாகவும், ஒழுக்காற்று சபையின் அறிக்கை அண்மையில் கட்சிக்கு கிடைத்ததாகவும் அவர் கூறினார். விஜயதாஸ ராஜபக்ஷ அவ்வாறு செய்வது கட்சியின் யாப்பை மீறும் செயலாகும் என ஒழுக்காற்று சபை தீர்மானித்துள்ளது.

பொதுஜன பெரமுனவின் சார்பில் அமைச்சரவையில் அங்கம் வகித்துக்கொண்டு சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டதாலேயே விஜயதாஸ ராஜபக்ஷமீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க மொட்டுக் கட்சி தீர்மானித்துள்ளது. (எ)

# பொலிஸ் கான்ஸ்டபிள்மீது நீதிமன்றத்தில் தாக்குதல்!

## கணவன், மனைவி கைது

களுத்துறை, ஜூன் 09

களுத்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் கடமையிலிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் மீது தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் கணவன், மனைவி இருவரும் கைது செய்யப்பட்டதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை பிரதேசத்தைச் சேர்ந்த தம்பதியினரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கணவன் மற்றும் மனைவி ஆகியோர் வழக்கு ஒன்று தொடர்பாக களுத்துறை நீதிவான் நீதிமன்றத்துக்கு வருகைதந்துள்ளனர்.

இதன்போது, அங்கு கடமையிலிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மனைவி அணிந்திருக்கும் ஆடை நீதிமன்றததுக்குப் பொருத்தமற்றது எனக் கூறியுள்ளார்.

இதனால், இருதரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில் கணவன் மற்றும் மனைவி இணைந்து பொலிஸ் கான்ஸ்டபிளை தாக்கியுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இதில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் களுத்துறை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, கணவனும் மனைவியும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# அம்மன் ஆலயத்தில் தீ மிதித்த வெளிநாட்டுக் குடும்பத்தினர்!

மட்டக்களப்பு, ஜூன் 09

அம்மன் ஆலயத்தில் நடந்த தீ மிதிப்பு உற்சவத்தில் தீயில் இறங்கி வெளிநாட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நேர்த்திக்கடன் செலுத்தினர்.

இலங்கையில் அதிகளவான பக்தர்கள் தீ மிதிப்பு உற்சவத்தில் கலந்துகொள்ளும் ஆலயம் என்ற பெருமையைப் பெற்ற கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு புன்னைச்சோலை அருள்மிகு பத்திரகாளியம்மன் ஆலயத்தின் தீ மிதிப்பு உற்சவம் பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் புடைசூழ வெகு விமர்சையாக நடைபெற்றது.



மட்டக்களப்பு மத்திய பிரதேசத்தில் பண்ணெடுங்காலமாக அருளாட்சி செய்துவரும் அன்னை பத்திரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருக்கதவு திறத்தல் உற்சவத்துடன் ஆரம்பமானது.

இந்த ஆலயத்தின் வருடாந்த தீ மிதிப்பில் பிற்பகல் ஆலயத்தில் விசேட பூஜைகள் நடைபெற்று அம்பாள் கடல்குளிப்பு நிகழ்வு நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து அம்பாள் ஆலயம் வருகை தந்தவுடன் தீக்குளிக்கு விசேட பூஜைகள் நடைபெற்று, பக்தர்களின் ஆரோகரா கோசங்களுடன் தீ மிதிப்பு உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. இதே நேரம் இந்த தீ மதிப்பு உற்சவத்தில் வெளிநாட்டவர்களும் கலந்துகொண்டு தீயில் இறங்கி நேர்த்திக்கடன்களை செலுத்தினர். (எ)

# அடுத்த சில நாட்களுக்கு வடக்கில் மழை பெய்யும்

கொழும்பு, ஜூன் 09

வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, நாட்டின் தென்மேற்கு பிரதேசத்தில் தற்போது நிலவும் மழை நிலைமை அடுத்த சில நாட்களுக்கு அதிகரிக்கும் என்றும்

மேல், சப்ரகமுவ, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 - 50 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடிய சாத்தியம் உள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

மேலும், காங்கேசன்துறையிலிருந்து புத்தளம், கொழும்பு மற்றும் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோ மீற்றர் வரை காணப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

முல்லைத்தீவிலிருந்து காங்கேசன்துறை மற்றும் மன்னார் ஊடாக புத்தளம் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 - 60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இதேவேளை, முல்லைத்தீவிலிருந்து காங்கேசன்துறை மற்றும் மன்னார் ஊடாக புத்தளம் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும்.

எனவே, கடலில் பயணம் செய்வோரும் மீனவர்களும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# போதை மாத்திரைகள் நுகர்ந்த மாணவர்கள் மயங்கி சரிந்தனர்

## இளைஞன் பொலிஸாரால் கைது

அம்பாறை, ஜூன் 09

அம்பாறை, பதியத்தலாவ பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் போதைப்பொருள் அடங்கிய இரண்டு மாத்திரைகளை உட்கொண்ட இரண்டு மாணவர்கள் மயங்கி விழுந்த நிலையில் பதியத்தலாவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பாடசாலையில் முதலாம் தரத்தில் கல்வி கற்கும் 6 வயது மாணவனும் 7 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் 11 வயது மாணவனுமே இவ்வாறு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

இந்த இரண்டு பாடசாலை மாணவர்களுக்கும் போதைப்பொருள் விற்பனை செய்த சந்தேகத்தின் பேரில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் இவர் பதியத்தலாவ, கெஹெல் உல்ல பிரதேசத்தில் வசிக்கும் 21 வயதுடையவராவார்.

இதேவேளை, மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இரண்டு மாணவர்களும் சகோதரர்கள் என்பதுடன் இவர்கள் இருவரும் பாடசாலைக்கு வரும் வழியில் கைதான இளைஞனை சந்தித்துள்ள நிலையில் அந்த இளைஞன் இவர்களுக்கு போதை மாத்திரைகளைக் கொடுத்துள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பின்னர் பாடசாலைக்கு சென்ற இரண்டு மாணவர்களும் அந்த இளைஞன் கொடுத்த போதை மாத்திரைகளை உட்கொண்டதுடன் சிறிது நேரத்தில் இரு மாணவர்களும் மயங்கி வீழ்ந்ததாகவும் இது குறித்து அதிபருக்கும் தெரிவிக்கப்பட்டதுடன் ஆசிரியர்கள் சிலரால் இந்த மாணவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதைப்பொருள் கடத்தல்

# குற்றவாளிகளின் சொத்துகள் அனைத்தும் அரசுடைமையாகும்

**கொழும்பு, ஜூன் 09**

**போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டு, அவர்களது சொத்துகள் அனைத்தும் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்படும் என்று பொலிஸார் எச்சரித்துள்ளனர்.**

யுக்திய நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து, விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தொடர்பான பல்வேறு தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாடுகளிலிருந்து போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்களின் பெயர்கள் மற்றும் இருப்பிடங்கள் தொடர்பான தகவல்களும் கிடைத்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தத் தகவல்கள் அனைத்தும் நீதிமன்றில் முன்வைக்கப்படவுள்ளன. அதன் பின்னர், சந்தேக நபர்களுக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டு, அவர்களது சொத்துகள் அனைத்தும் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்படும் எனவும் பொலிஸார் மேலும் கூறினர்.

(எ)

# தேரர் தாக்கி முதியவர் மரணம்

கொழும்பு, ஜூன் 09

கிரிஉல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாரவிட பிரதேசத்தில் தேரரின் தாக்குதலுக்கு இலக்காகி முதியவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

மாரவிட பிரதேசத்திலுள்ள வீடொன்றில் காயமடைந்த நிலையில் முதியவரொருவர் காணப்படுவதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து, காயமடைந்த முதியவர் தம்பதெனிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த முதியவரின் உறவினரான தேரரொருவரால் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

சந்தேக நபரான தேரர் விகாரையில் பணிபுரியாமல் தனது தாயின் வீட்டில் வசித்து வருவதாகவும் இவர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனவும் பொலிஸ் விசாரணையில் அறிய வந்துள்ளது.

இதேவேளை, சந்தேக நபர் அந்தப் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(எ)

100 பில்லியன் டொலர்களாக அதிகரிப்பு

# சர்வதேச கடன் மறுசீரமைப்பினை கானல் நீராக மாற்றிய அரசாங்கம்

கொழும்பு, ஜூன் 09

2024 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் மாத்திரம் 4 பில்லியன் டொலர் கடன்களை பெற்று அரச கடன்களை 100 பில்லியன் டொலர்களாக அரசாங்கம் அதிகரித்துள்ளது. இதன் மூலம் சர்வதேச கடன் மறுசீரமைப்பு என்பது கானல் நீராகவே காணப்படுகிறது- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அரச நிதி முகாமைத்துவ சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அரச நிதி முகாமைத்துவ சட்டமூலத்தை முன்வைத்துள்ளதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. சர்வதேச நாணய நிதியத்துடனான செயல் திட்டத்தின் போது தேசிய கடன்களை மறுசீரமைக்கப் போவதில்லை என்று குறிப்பிடப்பட்டது. ஆனால், தேசிய கடன்கள் தான் முதலாவதாக மறுசீரமைக்கப்பட்டது.

வெளிநாட்டு அரசு முறை கடன்களை இன்று மறுசீரமைப்பதாகவும், நாளை மறுசீரமைப்பதாகவும், அடுத்த மாதம் மறுசீரமைப்பதாகவும் அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால், ஒரு டொலர் கடன் கூட இதுவரை மறுசீரமைக்கப்படவில்லை. இதுதான் உண்மை.

இலங்கையின் மொத்த கடன் பெறுமதி 100 பில்லியன் டொலர் என்று அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு விட்டோம், பணவீக்கம் குறைவடைந்து விட்டது என்று அரசாங்கம் பெருமை கொள்கிறது. ஆனால், கடன் நிலைமை பற்றி ஏதும் குறிப்பிடுவதில்லை.

2024 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் மாத்திரம் அரசாங்கம் 4 பில்லியன் டொலர் தேசிய கடன்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. இவ்வாறான நிலையில் அரசு முறை கடன் 100 பில்லியன் டொலர்களாக உயர்வடைந்துள்ளது.

இலங்கையின் பிரதான இரு தரப்பு கடன் வழங்குநர்களாக இந்தியா, சீனா ஆகிய நாடுகள் உள்ளன. சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தகப் போட்டித்தன்மையால் இலங்கையின் பொருளாதாரம் பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது. சர்வதேச கடன் மறுசீரமைப்புக்கு இவ்விரு நாடுகளும் சாதகமான தீர்மானத்துக்கு வரவில்லை- என்றார்.(எ)

# திருகோணமலைக்கு ஸ்மார்ட் எதிர்காலம்

## விசேட நடமாடும் சேவை



திருகோணமலை, ஜூன் 09

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் "நானே ஆரம்பம் வெல்வோம் சிறீ லங்கா சூரன்களோடு" திருகோணமலைக்கு ஸ்மார்ட் எதிர்காலம் எனும் தொனிப்பொருளில் மக்கள் நடமாடும் சேவை வெள்ளிக்கிழமை திருகோணமலை - மக்ஹெய்ஸர் மைதானத்தில் இடம்பெற்றது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் தலைமையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஷ்பகுமார அனுசரணையுடன், அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களால் வழங்கப்படும் அனைத்து சேவைகளையும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் பயனாளிகளின் வதிவிட பிரதேசங்களில் இலகுவாக வழங்க இந்த வேலைத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டன.

இந்த நாட்டில் தொழிலாளர் சந்தையை புனரமைப்பதே இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துவதன் முக்கிய நோக்கமாகும்.

பாதுகாப்பான முறையில் வெளிநாடு செல்லல் மற்றும் மனிதக் கடத்தல் தொடர்பாக திருகோணமலை மாவட்டத்தின் அரச அதிகாரிகள், சட்டத்தரணிகள் மற்றும் அனுமதிப் பத்திரம் பெற்ற முகவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வும் இதன்போது நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவையில் தொழிலாளர் திணைக்களம், ஊழியர் நம்பிக்கை நிதியம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்கள், சிறுதொழில் அபிவிருத்திப் பிரிவு, தொழிற்பயிற்சி அதிகார சபை உட்பட பல நிறுவனங்கள் தமது சேவைகளை வழங்கியிருந்தன.

(எ)

# கலால் ஆணையாளருக்கு எதிராக மனுத்தாக்கல்!

கொழும்பு, ஜூன் 09

உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மீறி, கலால் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட நான்கு பேர், பல்பொருள் அங்காடிகள் மற்றும் அரசியல் சார்ந்தவர்களுக்கு புதிய மதுபான உரிமங்களை வழங்கி, நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாக உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நிட்டம்புவ பிரதேசத்தை சேர்ந்த கிஹான் ஷவிந்த பெர்னாண்டோ என்பவரே இவ்வாறு மனுத் தாக்கல் செய்துள்ளார்.

(எ)

# வர்த்தக பிணக்குகளைத் தீர்ப்பதற்கு மாற்றுவழி ஊடாக முதலீட்டுச் சூழல்

## இலங்கைக்கு உதவுகிறது அமெரிக்கா




கொழும்பு, ஜூன் 09

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் (USAID) ஊடாக வர்த்தகப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான மாற்று வழிகளுக்கான அணுகலை மேம்படுத்துவதன் மூலம் முதலீட்டுச் சூழலை மேம்படுத்தும் இலங்கையின் முயற்சிகளுக்கு அமெரிக்கா உதவி வழங்கி வருகிறது.

அமெரிக்க அனுசரணையுடன் இலங்கையிலுள்ள 23 சர்வதேச வர்த்தக மத்தியஸ்தர்கள் பயிற்சியினையும் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்வதற்கு இந்த முன்முயற்சி வழிவகுத்துள்ளது.

வணிக நிறுவனங்கள் தமது பிணக்குகளைத் தீர்ப்பதற்கு நீதிமன்றங்களில் வழக்குகளைத் தொடரும் பாரம்பரிய முறைக்குப் பதிலாக விரைவான மற்றும் செலவு குறைந்த ஒரு மாற்றீட்டை வழங்கக்கூடிய இலங்கையிலுள்ள தகுதி வாய்ந்த மத்தியஸ்தர்களின் எண்ணிக்கையை இது இரட்டிப்பாக்கியுள்ளது.

இந்த 23 மத்தியஸ்தர்களும் USAID [illegible] எனும் செயல்திட்டத்தின் கீழ், தகவல் தொடர்பு, சிக்கலைத் தீர்த்தல், உணர்வுகளை முகாமை செய்தல் மற்றும் தடைகளை வெல்லல் போன்ற முக்கிய பரப்புகளில் விரிவான பயிற்சியினைப் பெற்றுள்ளனர்.

சிங்கப்பூர் சர்வதேச மத்தியஸ்த மத்திய நிலையம் இந்தப் பயிற்சியை நடத்தியது. நான்கு மாத வழிகாட்டல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பின்னர், இந்த மத்தியஸ்தர்கள் 2026ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமளவில் இலங்கையில் சுமார் 100 வர்த்தக பிணக்குகளில் மத்தியஸ்தம் செய்வதற்கு தமது புதிய திறன்களைப் பயன்படுத்துவார்கள்.

வணிகங்களுக்கும் வணிகங்களுக்குமிடையே அல்லது வணிகங்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையே அல்லது வணிகங்களுக்கும் நுகர்வோருக்கும் இடையேயான பிணக்குகளுக்கு ஒரு விரைவான தீர்வினை ADRஇன் ஒரு முக்கிய வடிவமான வர்த்தக மத்தியஸ்தம் வழங்குகிறது. இம்முறையானது செலவு குறைந்ததாக இருப்பதுடன், வணிக உறவுகளைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. அத்துடன், சர்வதேச தீர்வு ஒப்பந்தங்கள் மிகவும் செயற்றிறனுடன் அமுலாக்கப்படுவதை உறுதி செய்வதன் மூலம் சர்வதேச வர்த்தகத்துக்கும் அது உதவி செய்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையற்ற தேசம் கொள்கைக்கு முரணாக செயல்படும் அரசாங்கம்

## சபையில் சாடினார் சஜித்



கொழும்பு, ஜூன் 09

**அரசாங்கம் விநியோகித்துவரும் மதுபான உரிமப்பத்திரம் வழங்கும் திட்டம் போதையற்ற தேசத்தை உருவாக்கும் கொள்கைக்கு முரணானதாகும். அத்துடன் சுற்றுலாத் தொழில் முன்னெடுக்கப்படாத கிராமங்களுக்குள்ளேயும் மது பானசாலைகளுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ் சாட்டியுள்ளார்.**

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

அரசாங்கம் கடந்த காலங்களில் மதுபான உரிமப்பத்திரம் வழங்கும் திட்டத்தை வேகமாக முன்னெடுத்துள்ளது. இது போதையற்ற தேசத்தை உருவாக்கும் கொள்கைக்கு எதிரானதாகும். சுற்றுலாத் துறையை மையமாகக் கொண்டு இந்த அனுமதிகளை வழங்குவது சுற்றுலாத் துறையின் ஒரு பகுதியாக அமைந்திருந்தாலும், சுற்றுலாத் தொழில் முன்னெடுக்கப்படாத கிராமங்களுக்குள்ளேயும் இதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

விகாராதிபதிகள் அடங்கலாக பிற மதத் தலைவர்கள், பொதுமக்கள், சிவில் அமைப்பினர் இதற்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். எனவே, மதஸ்தானங்களுக்கு அருகாமையில், பாடசாலைகளுக்கு அருகாமையில், சுற்றுலாத் தொழில் முன்னெடுக்கப்படாத பிரதேசங்களில் இந்த அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தால் அவற்றை ஆராய்ந்து, பொருத்தம் இல்லாத இடங்களில் வழங்கப்பட்ட மதுபான அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசியல் ரீதியாக தமதாக்கிக் கொள்ளும் நோக்கில், பல்வேறு நபர்களுக்கு, பல்வேறு வகையான மதுபான அனுமதிப் பத்திர இலஞ்சம் வழங்கும் விளையாட்டு இனியேனும் நிறுத்தப்பட வேண்டும். சுற்றுலாத்துறையை அண்டியுள்ள இடங்களில் முறையாக இதனை விநியோகிப்பதற்கு நாங்கள் எதிர்ப்பு இல்லை.

அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வேறு பெயர்களில் மதுபான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதை ஆரம்பமாக இந்த சபையில் வெளிப்படுத்தியது நான் தான். அதனால் இதில் மக்கள் பிரதிநிதிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்களா? என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்- என்றார்.

# யாழில் கூரிய ஆயுதங்கள் மீட்பு

## வெளிநாட்டுப் பிரஜை குறித்து பொலிஸார் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம், ஜூன் 09

யாழ்ப்பாணம் சுன்னாகம் ஈவினைப் பகுதியில் ஆபத்தை ஏற்படுத்தும் கூரிய ஆயுதங்களுடன் சந்தேக நபரொருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பிராந்திய விசேட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரே ஆயுதங்களை மீட்டதுடன் சந்தேகநபரையும் கைது செய்தனர்.

சுன்னாகம் ஈவினைப் பகுதியில் வெளிநாட்டுப் பிரஜை ஒருவருக்கு சொந்தமான வீட்டில் வாள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்கள் இருப்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, எட்டு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதுடன் சம்பவம் தொடர்பில் கைதான நபரிடம் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த நபர் பல்வேறுபட்ட வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கும் பொலிஸார், இந்த விவகாரத்துடன் வெளிநாட்டுப் பிரஜைக்கும் தொடர்புள்ளதா? அல்லது வேறு நபர்களுக்குத் தொடர்புள்ளதா என்ற கோணத்தில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)



# ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட கஞ்சா செடிகளுடன் மூவர் கைது

மொனராகலை, ஜூன் 09

மொனராகலையில் கோணஹங்கார பொலிஸ் பிரிவில் ஒரு இலட்சத்து 12, 500 கஞ்சா செடிகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கோணஹங்கார பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்மடஹூடல யால வனப்பகுதியில் கஞ்சா பயிரிடப்பட்டுள்ளதாக புத்தல விஷேட அதிரடிப்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய படையினர் அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது பயிரிடப்பட்ட ஒரு இலட்சத்து 12,500 கஞ்சா செடிகளை கைப்பற்றியுள்ளனர்.

42, 42, 48 வயதுகளையுடைய எம்பிலிப்பிடிய பகுதியைச் சேர்ந்த ஒருவர், தனமல்வில பகுதியைச் சேர்ந்த இருவர் என மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் மூவரும் கோணஹங்கார பொலிஸ் நிலையத்தில் விசேட அதிரடிப்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர், சந்தேக நபர்களை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# வடக்கு வருகிறார் பிரதமர் தினேஷ்

யாழ்ப்பாணம், ஜூன் 09

பிரதமர் தினேஷ் குணவர்த்தன, அடுத்த வாரம் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு வருகை தரவுள்ளார்.

பிரதமரின் வடக்கு வருகை தொடர்பான நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தும் நோக்கில் கலந்துரையாடல் ஒன்றை சூம் செயலி ஊடாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினரும், பிரதமரின் மகனுமான யதாமினி, வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன் மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களும் கலந்து கொண்டனர்.

முன்பதாக உஸ்ஸட்டகெய்யாவ , தல்தியாவ பகுதியில் அமைந்துள்ள முகத்துவாரப் பிரதேசத்தை ஆழப்படுத்துவது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அப்பிரதேச கடற்றொழில் சங்கப்பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இக் கலந்துரையாடலின் போது குறித்த இறங்குதுறையை உடனடியாக ஆழப்படுத்தும் பணிகளை ஆரம்பிக்கவும் அதற்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாகவும் உரிய அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை வழங்கினார்.

இச்சந்திப்பின்போது அமைச்சின் செயலாளர், உதவிச் செயலாளர் மற்றும் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதனிடையே கடற்றொழில் அமைச்சின் கீழ் உள்ள நாரா நிறுவனத்தின் பணிகளின் சமகால முன்னேற்றம் தொடர்பாகவும் கலந்துரையாடல் நடைபெற்றது.

குறிப்பாக சாலை, முல்லைத்தீவு, நந்திக்கடல், நாயாறு, சுண்டிக்குளம், அறுகம்பே, மட்டக்களப்பு, சிலாபம், புத்தளம், கொக்கல களப்புகளின் ஆழப்படுத்தல் மற்றும் வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் மீன் குஞ்சுகள், இறால் குஞ்சுகளை வைப்புச் செய்தல் போன்ற செயல்பாடுகளுக்கான ஆராய்வுகள், மதிப்பீடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன. (எ)

## வடக்கிலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு

# செயற்கை அவயவம் பொருத்தும் இலவச முகாம் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 09

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு இந்தியாவின் ஜெய்பூரிலுள்ள பகவான் மகாவீர் விக்லாங் சஹாயட்ட சமித்தியினுடைய தொழில்நுட்ப உதவியுடன் இம் மாகாணத்தில் இரண்டாவது தடவையாக செயற்கை அவயவம் பொருத்தும் இலவச முகாம் இம்மாதம் 4 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளியிலுள்ள யாழ். மாவட்ட திறன் விருத்தி நிலையத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தியத் தூதரகத்தின் அனுசரணையுடன் யாழ். இந்தியத் துணைத் தூதரகமும் வடக்கு மாகாண பிரதம செயலாளர் செயலகம் மற்றும் மகளிர் விவகார சமூக சேவைகள் அமைச்சு, யாழ். மாவட்ட செயலகம், மாகாண சமூக சேவைகள் திணைக்களம் என்பன இணைந்து இந்த இலவச முகாமை ஏற்பாடு செய்துள்ளன. இந்திய வெளிவிவகார அமைச்சு இதற்கான அனுசரணையை வழங்கியுள்ளது.



இதற்கமைய சமூக சேவைகள் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் ஏற்கனவே பயனாளிகள் தெரிவு இடம்பெற்றுள்ளன. தங்கள் அவயவங்களை துரதிஷ்டவசமாக இழந்த மாற்றுத்திறனாளிகளுக்கான கௌரவமான சமுதாய வாழ்வை மீளக் கொடுக்கும் முகமாகவும் அதே நேரம் அவர்களைப் பொருளாதார ரீதியாக வலுப்பெறச் செய்யும் நோக்கோடும் இம் முகாம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இம் முறை 350 பயனாளிகள் நன்மையடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், இம் முறை இந்திய ஜெய்பூர் தொழில்நுட்பவியலாளர்களுடன் புதிய நுட்ப பரீட்சயத்துக்காக யாழ். ஜெய்பூர் மாற்றுத்திறனாளிகளுக்கான புனர்வாழ்வு நிலைய தொழில்நுட்பவியலாளர்களும் இணைந்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
09.06.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 27

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## இந்தியாவை அழைப்பதற்கு முன்னர்!

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறீதரன் மூன்றாவது தடவையாக பிரதமராக பதவியேற்கவுள்ள நரேந்திர மோடி அவர்களுக்கான வாழ்த்துச் செய்தியில், ஈழத் தமிழ் மக்களுக்கான சமஷ்டித் தீர்வுக்கு இந்தியா அரணாக வேண்டும் என்று தெரிவித்திருக்கின்றார்.

இந்திய பிரதமர் மோடியின் அழைப்பையே உதாசீனம் செய்த சம் பந்தனின் தலைமையின் கீழ் செயல்பட்ட சிறீதரன், இந்திய பிரதமருக்கு வாழ்த்துச் செய்தியை அனுப்பியது வரவேற்கப்பட வேண்டிய விடயம்தான் - எனினும், இந்தியாவை நோக்கி அழைப்பு விடுவதற்கு முன்னர், தமிழ் கட்சிகளின் இன்றைய நிலைமை சரிசெய்ய வேண்டியதே முதன்மை யானதாகும். இலங்கை தமிழ் அரசுக் கட்சியை முதலில் சரி செய்ய வேண்டியிருக்கின்றது அத்தோடு, ஏனைய கட்சிகளையும் உள்வாங்கி ஐக்கிய முன்னணி ஒன்றை ஏற்படுத்த வேண்டியிருக்கின்றது. அதன் பின்னர்தான் இந்தியாவை நோக்கிச் செல்ல வேண்டும்.

தமிழ் அரசு கட்சிக்கான தலைவர் தெரிவில் வெற்றிபெற்றவர் சிறீதரன் ஆனாலும் அவரால் தலைவராக செயல்பட முடியவில்லை அந்தளவுக்கு கட்சி, உள் முரண்பாடுகளுக்குள் சிக்குண்டு, சீரழிந்து கொண்டிருக்கின்றது. தான் தலைவரானால், இந்திவுடனான உறவுகளை கட்டியெழுப்பும் நோக்கில் புதுடில்லியில் அலுவலகம் ஒன்றை ஏற்படுத்தப் போவதாகவும் சிறீதரன் அறிவித்திருந்தார்.

சிறீதரனின் தலைமைத்துவ ஆற்றலை இப்போதைக்கு எவரும் மதிப் பிட முடியாது. ஏனெனில், அவர் தலைவராக அமரவில்லை. அதற்கான வாய்ப்பு அவருக்கு இதுவரையில் கிட்டவில்லை. ஆனால், சம்பந்தனது தலைமைத்துவம் தோல்வியடைந்துவிட்டது. சம்பந்தன் ஒரு தோல்விய டைந்த அரசியல்வாதி. அதேபோன்று, அரசியல் தீர்வு விடயங்களை கையாள்வதில் சுமந்திரனும் தோல்வியடைந்த ஒருவர்தான். இதற்கு அடிப்படையான காரணம் என்ன?

காரணம் ஒன்றுதான் - அதாவது, சூழ்நிலைகளில் ஆற்ற வேண்டிய காரியங்களை ஆற்றாமல், சாத்தியமற்ற விடயங்களை கையாள முற்பட்ட தாகும். அரசியல் என்பது அடிப்படையில் சாத்தியங்களை கையாளும் கலையாகும். ஒவ்வொரு காலகட்டங்களில் ஒவ்வொரு விடயம் சாத்திய மாகலாம். அதனை சரியாக புரிந்துகொண்டு, அதற்கேற்றவாறு அரசியல் தந்திரோபாயங்களையும் செயல்பாடுகளையும் ஒருங்கிணைக்க வேண்டியதே ஒரு தலைமையின் பணியாகும். அரசியலை கையாளுதல் என்பது இதுதான். ஆனால், சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோரின் அணுகுமுறை அவ்வாறு அமைந்திருக்கவில்லை.

அதேவேளை தமிழ் அரசுக் கட்சிக்குள் அவர்களின் அணுகுமுறைகள் தவறானவை என்பதை சுட்டிக்காட்டும் வல்லமையுடன் எவரும் இருந் திருக்கவில்லை அத்துடன், பங்காளிக் கட்சிகளிலுள்ள ஆற்றலுள்ள வர்களை இணைத்துக் கொண்டு பயணிக்கும் துணிச்சலும் தமிழ் அரசுக் கட்சியிலிருந்தவர்களிடம் இருந்திருக்கவில்லை. இவ்வாறான காரணங் களால்தான், 2015இன் ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து, கிடைக்கப்பெற்ற வாய்ப்புகளை சம்பந்தன் வீணாக்கியபோது, அதற்கு ஏனையவர்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பக்கபலமாக செயல்பட்டிருந்தனர். சிறீதரனும் இந்த விடயத்தில் விமர்சனத்துக்கு அப்பால்பட்டவர் அல்லர். சிறீதரன் போன்றவர்கள் தலைவர்களாக வேண்டுமென்றால் அனைத்து தரப்புக்களையும் அரவணைத்துச் செயல்படுவதற்கு ஏற்றவாறு தன்னை தயார் செய்ய வேண்டும்.

ஈழத் தமிழர் விவகாரத்தில் இந்தியா எக்காலத்திற்குமான நிர்ணய கரமான சக்தி. இதனை புரிந்து கொண்டு, அதேவேளை, சூழ்நிலைகளை கையாளும் திறனுள்ள தலைவர்கள் தமிழர் அரசியலை கட்டுப்படுத்தும் போது மட்டுமே விடயங்கள் முன்னோக்கி நகரும். இந்தியாவை நோக்கி பிரத்தியேகமாக செல்வதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில் இந்தியா அதன் நிலைப்பாட்டை தெளிவாக முன்வைத்திருக்கின்றது - முன்வைத்து வரு கின்றது - எனவே, இப்போது, தமிழ் மக்கள் மத்தியிலிருந்துதான் விட யங்கள் நகர்த்தப்பட வேண்டும்.

# நுகர்வோர் பாதுகாப்பு சட்ட திருத்தம் 2 வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில்

### சமர்ப்பிக்கப்படும் என்கிறார் உணவு பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஜூன் 09

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்தி அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனை இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக, வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது சுமித் உடுகும்புர எம். பி. எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள நுகர்வோர் சட்டம் கடந்த 20 வருடங்களாக திருத்தம் செய்யப்படவில்லை. இந்த சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அது தற்போது சட்டமா அதிபரின் கவனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் தற்போது குறைவடைந்து வருகின்றன. அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. எனினும், நுகர்வோர் அதிகார சபை விசாரணைப் பிரிவு அதிகாரிகள் பற்றாக்குறை காணப்படுகிறது. நாடளாவிய ரீதியில் 277 அதிகாரிகளே தற்போது கடமையில் உள்ளனர்.

இந்த நிலைமை நிவர்த்தி செய்யும் வகையில் மேலும் விசாரணைப் பிரிவு அதிகாரிகளை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் அந்த நடவடிக்கையை முன்னெடுக்க முடியும்.

விரிவான சந்தை நடவடிக்கைகள் நாட்டில் இடம்பெறுவதால் நுகர்வோருக்கு அநீதி ஏற்படுவதை அறிய முடிகிறது. அதிக இலாபத்தை நோக்காகக் கொண்டு வர்த்தகர்கள் செயல்படுகின்றனர். அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (எ)

# எக்ஸ்பிரஸ் பேர்ளின் கழிவுகளை ஆய்வு செய்ய விசேட குழு வருகை!

கொழும்பு, ஜூன் 09

தீ விபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் பிளாஸ்டிக் கழிவுகளை ஆய்வு செய்வதற்காக பிரித்தானியாவைச் சேர்ந்த விசேட நிபுணர் ரிச்சர்ட் தோம்சன் உள்ளிட்ட குழுவினர் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்திற்கு உள்ளாகி கடலில் மூழ்கியதன் பின்னர் கரையொதுங்கிய பிளாஸ்ரிக் கழிவுகள், புத்தளம், வத்தளை பிரதேசங்களில் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ள நிலையில், குறித்த பிளாஸ்ரிக் கழிவுகளை ஆய்வு செய்வதற்காக நிபுணர் ரிச்சர்ட் தோம்சன் நாட்டுக்கு வருகை தந்துள்ளார்.

இதேவேளை, அவருக்கு உதவும் வகையில் அவுஸ்திரேலியாவின் சட்டத்தரணி மிச்செல் டெய்லரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

பிளாஸ்ரிக் கழிவுகள் ஊடாக நாட்டின் கரையோர வளங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பான ஆய்வு அறிக்கையை பேராசிரியர் ரிச்சர்ட் தோம்சன் இதன்போது தயாரிக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் அவர் இதற்கு முன்னரும் நாட்டுக்கு வருகை தந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மத்திய மாகாணத்தில் உள்ள கால்நடைகளுக்கு புதிய நோய்

கொழும்பு, ஜூன் 09

நுவரெலியா மாவட்டம் உள்ளிட்ட மத்திய மாகாணத்தின் பல பகுதிகளில் கால்நடைகளுக்கு புதிய நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக அங்குள்ள பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக கால்நடைகள் உயிரிழக்கும் வீதம் அதிகரித்துள்ளதுடன் பால் உற்பத்தி வெகுவாக குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த நோய்த் தாக்கம் கடந்த காலங்களில் வட மாகாணத்தில் பதிவாகியிருந்தது.

இந்த நோய் தற்போது மத்திய மாகாணத்திலும் பரவ ஆரம்பித்துள்ளதாக பண்ணையாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, இந்த நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசிகள் இதுவரையில் கால்நடைகளுக்கு வழங்கப்படவில்லை என சில பண்ணையாளர்களால் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இந்த நோய்த் தாக்கம்குறித்து இலங்கை அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உப தலைவர் சௌந்தரராசா சுகிர்தனை வினவியபோது-

இதற்கு பதிலளித்த அவர், நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசிக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை அது தங்களுக்கு கிடைக்கப் பெறவில்லை என தெரிவித்தார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளாஸ்டிக் கட்டுப்பாட்டை நோக்கி முன்னேறும் உலகம்

**சிதம்பரம் இரவிச்சந்திரன்**

மனித ஆரோக்கியம் மற்றும் சூழலைக் காக்க உலக நாடுகள் முதல்முறையாக பிளாஸ்டிக் உற்பத்தியை வரும் பதினைந்து ஆண்டுகளில் 40 வீதம் குறைக்கும் தீர்மானத்திற்கு ஒப்புக் கொண்டுள்ளன. கனடா ஒட்டாவா நகரில் ஏப்ரல் 23 முதல் 30, 2024 வரை நடந்த மாநாட்டில் ஐநா பன்னாட்டு அரசுகளுக்கு இடையில் பிளாஸ்டிக் மாசு குறைப்பிற்கான கமிட்டியைச் சேர்ந்த பிரதிநிதிகள், உற்றுநோக்கர்கள் பேச்சுவார்த்தை நடத்தினர். பிளாஸ்டிக் உற்பத்தியின்போது பெருமளவில் உமிழப்படும் கார்பனைக் குறைக்கும் இலட்சியத்தில் முன்னேற்றத்துடன் இது பற்றிய இந்த நான்காவது மாநாடு முடிந்தது.

இம்மாநாட்டில் ஒன்றுபட்ட கருத்து ஒற்றுமை ஏற்படவில்லை என்றாலும் உடன்படிக்கைக்கான ஒப்புதல் மொழியுடன் நிறைவடைந்துள்ளது. வரும் கூட்டங்களில் உடன்படிக்கையாக மாறவிருக்கும் ஆவணம் பற்றி விவாதிக்கப்பட்டது. பெரும்பாலான பிளாஸ்டிக்குகளும் புதை படிவ எரிபொருட்களில் இருந்தே தயாரிக்கப்படுகின்றன. பிளாஸ்டிக் உற்பத்தி நாடுகள், நிறுவனங்கள், வாயு ஏற்றுமதியாளர்கள் குறைப்பை கடுமையாக எதிர்த்தபோதிலும் அதற்கான இலக்கு இறுதி ஆவணத்தில் சேர்க்கப்பட்டது.

ஒட்டாவா கூட்டம் முடிவடைந்தாலும் உடன்படிக்கை பற்றி இந்த ஆண்டு கடைசியில் தென்கொரியாவில் நடைபெறவிருக்கும் இறுதிச் சுற்று கூட்டத்திற்கு முன்பு, இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஆவணத்தை செயல்படுத்தும் பணிகளில் கமிட்டியினர் தொடர்ந்து செயல்படுவர். தென்கொரியா கூட்டத்தில் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த தேவையான நிதி மற்றும் பிளாஸ்டிக்குகளில் உள்ள வேதிப்பொருட்களால் ஏற்படும் பாதிப்பு குறித்த கணிப்பு, அவற்றின் வடிவமைப்பு பற்றி விவாதிக்கப்படும். ருவாண்டா மற்றும் பெரு ஆகிய நாடுகளின் உலகளவிலான குறைப்பிற்கான இலக்குடன் கூடிய பரிந்துரை இந்த கூட்டத்தில் ஏற்கப்பட்டது. இது பிளாஸ்டிக் கட்டுப்பாட்டில் ஒரு விடிவெள்ளி என்று கருதப்படுகிறது. இதன் மூலம் பிளாஸ்டிக் தயாரிப்பில் 2025ம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு முதன்மை பாலிமர்களின் உற்பத்தியை வரும் பதினைந்து ஆண்டில் நாற்பது சதவிகிதம் குறைக்க முடியும். "யானையை அறைக்குள் வைத்திருப்பது போல இது வரை ஆட்சியாளர்கள் பிளாஸ்டிக் உற்பத்தி குறைப்பு பற்றி பேசவில்லை" என்று ருவாண்டா பிரதிநிதி கூறினார்.

பிளாஸ்டிக் கூட்டமைப்பு இயக்கத்தைச் சேர்ந்த பல விஞ்ஞானிகள் இவற்றால் உண்டாகும் மாசு பற்றிய தங்கள் ஆய்வறிக்கைகளை பிரதிநிதிகளிடம் சமர்ப்பித்தனர். "கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் உடன்படிக்கையை உருவாக்கும் செயல்முறையில் பொதுவான ஒரு கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தனர். இந்த கூட்டங்களின் முடிவுகள் மனித குலத்தின் எதிர்காலம், பூமியின் வருங்கால நல வாழ்வை தீர்மானிக்கக் கூடியது" என்று ஈக்குவெடோர் பிரதிநிதி வால்ட்டர் ஷல்ட் கூறினார்.

பிளாஸ்டிக் கட்டுப்பாடு பற்றிய உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தைகள் டிசம்பர் 2022ல் ஆரம்பித்தன. மார்ச்சில் உருகுவேயில் ருவாண்டா மற்றும் பெரு நாடுகளின் பரிந்துரைகளுடன் தொடங்கின. மே 2023 பாரிஸ் பேச்சுவார்த்தையில் எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் காணவில்லை. நவம்பரில் நைரோபியில் நடந்த கூட்டம் உடன்படிக்கைக்கான விதிமுறைகள் பற்றி விவாதித்தது. "தீவிர இரண்டாண்டு விவாதங்களைத் தொடர்ந்து உடன்படிக்கைக்கான ஒரு இறுதி ஆவணம் இப்போது உருவாகியுள்ளது" என்று சர்வதேச மாசு நீக்கத்திற்கான ஒருங்கிணைப்பாளர் பியேர்ன் பீலர் கூறுகிறார்.

பிளாஸ்டிக் உற்பத்தி மற்றும் மாசால் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றி அமெரிக்காவின் லூசியானா, டெக்சாஸ் மாகாணங்களில் பெட்ரோலிய வேதிப்பொருட்கள் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அருகில் வாழும் பிளாஸ்டிக்கில் இருந்து விடுபடுவோம் என்ற இயக்கத்தின் மக்கள் சமூக பிரதிநிதிகள் அமெரிக்க அரசை உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரி தபால் அட்டைகளைக் கொடுத்தனர். தாங்கள் அனுபவிக்கும் காற்று, நீர் மாசு பற்றி நேரில் வந்து பார்க்க பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுத்தனர்.

நியூசிலாந்தில் இருந்து வந்த ஆதிவாசி குழுவினர் இப்பிரச்சனையால் நுண் பிளாஸ்டிக்குகள் உணவு விநியோகத்திலும் கலந்து விட்டது என்று கூறினர். "இது குறித்து பேச எங்களுக்கு உரிமையுண்டு. நாங்கள் பங்கேற்பாளர்கள் இல்லை. பிரச்சனைக்கு காரணமாக இருப்பவர்களை விட இது பற்றி பேசவும், முடிவெடுக்கவும் எங்களுக்கு முழு உரிமை தரப்பட வேண்டும். நியூசிலாந்தின் வடக்கு கடலோரத்தில் கடலடி மண்ணில், மீன்களில் ஏராளமான நுண் பிளாஸ்டிக்குகள் உள்ளன" என்று அந்நாட்டின் ஆதிவாசி சமூகப் பிரதிநிதி ஜூரசா லீ கூறினார்.

"உருவாகவிருக்கும் உடன்படிக்கை ஆதிவாசி சமூகங்களின் வருங்காலத் தலைமுறைகளை பாதுகாக்க வேண்டும். உலக மக்களின் மனசாட்சின் பிரதிநிதியாகவே நாங்கள் வந்திருக்கிறோம்" என்று அலாஸ்கா ஆர்க்டிக் ஆதிவாசி மக்கள் பிரதிநிதி வி வாக்கியி கூறினார்.

விநியோகம் மற்றும் தேவை ஆகியவற்றின் பலன்கள் இந்த தீர்மானத்தின்படி மதிப்பிடப்படும். ஒட்டுமொத்தமாக முதன்மை பாலிமர்களின் உற்பத்தி நீடித்த நிலையான வளர்ச்சிக்கு உதவும் வகையில் வருங்காலத்தில் பிளாஸ்டிக்குகள் உற்பத்தி செய்யப்படுவது பற்றி ஆராயப்படும். மேலும் இந்த தீர்மானத்தின்படி பாலிமர்களின் உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி குறித்த புள்ளிவிவரங்கள் வெளியிடுவது கட்டாயமாக்கப்படும்.

இலக்குடன் கூடிய இந்த கட்டுப்பாடு நடைமுறைக்கு வரும்போது புவி வெப்ப உயர்வை பந்நாட்டு சட்ட அங்கீகாரத்துடன் 1.5 டிகிரி செல்சியர்ஸிற்குள் கட்டுப்படுத்துவது பற்றிய 2015 பாரிஸ் காலநிலை உச்சி மாநாட்டின் தீர்மானம் போல இந்த உடன்படிக்கை மாறும். பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி மற்றும் நுகர்விற்கு இடையில் உள்ள இடைவெளியை நிரப்புவதன் மூலம் பிளாஸ்டிக்கின் வட்டப் பொறுளாதாரத்தை பாதுகாப்பான அளவிற்கு மாற்ற முடியும் என்று ருவாண்டா மற்றும் பெரு ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

### நிலக்கரியும் பிளாஸ்டிக்குகளும்

அமெரிக்காவில் 2030ல் நிலக்கரி பயன்பாட்டை விட பிளாஸ்டிக் உற்பத்தியே அந்நாட்டின் சூழல் சீரழிவுக்கு முதன்மைக் காரணமாக இருக்கும் என்று பிளாஸ்டிக்குகளுக்கும் அப்பால் என்ற சூழல் அமைப்பு 2021ல் நடத்திய ஆய்வு கூறுகிறது. 2022 நைரோபி கூட்டத்தில் பிளாஸ்டிக் கழிவுகளை குறைப்பது பற்றி உலக நாடுகள் ஒப்புக் கொண்டன. இதற்கான உடன்படிக்கை இறுதிச் சுற்றுப் பேச்சுவார்த்தையில் உருவாகும் என்று நம்பப்படுகிறது. •

# இந்தவார ராசிபலன் 09.06.2024 - 15.06.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - வைகாசி 27

நல்ல நேரம்: 7.30 - 08.30 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : திருதியை

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். கோவில், குளம் என புனித யாத்திரைகள் மேற்கொள்வர். வாழ்க்கையில் முன்னேற்றம் கல்வியில் தேர்ச்சி ஏற்படும். எதிர்பார்த்த இனங்களில் இருந்து ஏற்படும் பணவரவால், இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். உங்கள் திறமைக்கு ஏற்றபடி புகழ், கௌரவம் கூடும். அனைத்து வேலைகளையும் நம்பிக்கையுடன் செய்து முடிப்பீர்கள். யணங்களை மேற்கொள்ள நேரும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

வெற்றி கிட்டும். அரசுப் பணிபுரிபவர்களுக்கு உயர் அதிகாரிகள் உதவியால் பதவி உயர்வுகள் கிடைக்கும். பக்திப் பிரசங்கங்கள் கேட்பதில் ஆர்வம் ஏற்படும். புதிய தொழில் தொடர்புகள் மூலம் முன்னேற்றம் ஏற்படும். உயர் அதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள். பதவி உயர்வின் மூலம் பணப்பயன்களை அடைவீர்கள். புண்ணிய ஸ்தல யாத்திரைகள் சென்று மகிழ் வீர்கள். வியாபாரத்தில் திட்டமிட்டபடி புதிய விரிவாக்கங்கள் செய்து முடிப்பீர்கள். அதன் காரணமாக வருவாய் ஓரளவு அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் சீர்படும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் பல வழிகளிலும் பணம் குவியும். உறவுகளின் உதவி உரிய நேரத்தில் கிடைக்கும். யாத்திரையும், வெளிநாட்டுப் பயணங்கள் மகிழ்ச்சி தரும். ஆன்மீக வழிகளில் ஆர்வம் அதிகரிக்கும். சிலருக்கு புத்திர பாக்கியம் ஏற்படும். புகழ், மரியாதை ஆகியவை கூடும். குடும்பத்தில் நல்ல பல முன்னேற்றங்கள் ஏற்படும். நல் ஆரோக்கியம் ஏற்படும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். எடுத்த முயற்சிகள் அனைத்திலும் முன்னேற்றம் அடைவீர்கள். பண விஷயம் அலைச்சல்கள் அதிகம் இருக்கும்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். சிலருக்கு நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும். மனோதைரியம் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். முழு மூச்சுடன் ஈடுபடும் வேலைகளில் புதிய சாதனைகள் படைப்பீர்கள். மனதிற்கினிய பெண்கள் சல்லாபம், முயற்சிகளில் வெற்றி போன்றவற்றால் மனம் மகிழும். புதிய நண்பர்களால் நன்மையும் ஏற்படும்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

எதிர்பார்த்த இடங்களிலிருந்து பணவரவு ஏற்படும். உறவுகள் மூல மாகவும் பணவுதவி கள் கிடைக்கும். அரசாங்கத்திடம் இருந்து அனு கூலமான செய்திகள் வந்து சேரும். பாசம் மிக்க பெண்களால் மன மகிழ்ச்சி ஏற்படும். பயணங்களால் சுகம் ஏற்படும். உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்த அளவுக்கு இலாபம் அடைய புதிய யுக்திகளை கடைப்பிடிப்பீர்கள்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் நீங்கள் விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும், ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகளுக்காக எதிர்பார்க்கப்படும் வங்கிக் கடன் உதவிகள் தாமதத்திற்கு பின்னர் கிடைக்கும். அரசுப் பணியாளர்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்க லாம். குடும்பத்தினரிடையே ஓரளவே ஒற்றுமை நிலவும், அவர்களை அனுசரித்து செல்வது நல்லது. . சிலருக்கு எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி மேல் வெற்றி கிடைக்கும்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் உங்கள் விருப்பத்துக்கு இணங்க அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும். எவ்விதத் தடையின்றி வெற்றி பெறும். சுபகாரியங்களுக்கு என வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் இல்லத்துக்கு தேவையான நவீன வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி அனுபவிப்பீர்கள். நீங்கள் நினைத்ததெல்லாம் நடக்கும். விரும்பியதெல்லாம் கிடைக்கும். கணவன், மனைவி இருவரும் ஒருவர் மீது ஒருவர் பாசமழை பொழிவர். பிள்ளைகளின் முன்னேற்றங்கண்டு பெருமை கொள்வீர்கள். பணிபுரியும் இடத்தில் உங்கள் உழைப்பின் சிறப்பு பாராட்டுப் பெறுவதோடு, பதவி உயர்வுக்கும் கைகொடுக்கும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் வீட்டில் சுபநிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெறும். மனைவியின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்தால் இல்லத்தில் இன்பம் பொங்கும். முன்னேற்றங்களும் தேடிவரும். திறமை மிக்கவராக விளங்கினார். ஆயினும், அனுகூலமற்ற பயணங்களும் அதனால் லாபக் குறைவும் ஏற்படும். குடும்பத்திற்கு அதிகப்படியான வருமானம், கடின உழைப்புக்கு பின் கிடைக்கும். பக்தி மார்க்கத்தில் அதிக ஈடுபாடு ஏற்படும். சிலர் பிறரால் ஏமாற்றப்படலாம்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் பல திசைகளில் இருந்தும் பணம் கூடுதலாக வரும். பெண்களின் வாழ்க்கையில் துன்பங்கள் மறைந்து, முன்னேற்றம் ஏற்படும். வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். தாய் மூலம் நன்மைகள் ஏற்படும். அந்தஸ்து உயரும்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். புதிய விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். அரசுப் பணியாளர்கள், அதிகாரிகள் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும். சுபச் செய்திகள் வந்து காது களில் தேனைப் பாய்ச்சும். புதிய கொள்முதல் களால் வியாபாரம் பெருகி இலாபம் அதிகரிக்கும். தொட்டது துலங்கும். பொழுது போக்குச் செலவுகள் அதிகமாகும். கடினமாக உழைத்தாலும், உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்காது. உற்சாகமும் கூடும்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். பணவரவு அதிகரிக்கும். சிலருக்கு விஐபி களின் நட்பு கிடைக்கும். அவர்கள் மூலமாக ஆதா யங்கள் ஏற்படும். உங்கள் கீர்த்தி பெருகும். புனித காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். அரசுப் பணிக்கு முயல்பவர்களுக்கு அனுகூலமான காலமாகும். வழக்கு விவகாரங்களை ஒத்திப் போடுவது நல்லது. கால்நடைச் செல்வம், பால் வளம் பெருகும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே நடத்தி முடிப்பீர்கள். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளின் தயவால் அதிகாரம் பண்ணும் தலை பதவி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 இடங்களில் ஒரு லட்சம் வாக்கு: மாநிலக் கட்சி அந்தஸ்தை எட்டும் நாம் தமிழர் கட்சி!

‘நீதிமன்றம் சென்றும் கிடைக்காத சின்னத்தை மக்கள் மன்றம் தந்த தீர்ப்பின் மூலம் பெறப் போகிறோம்' என்று உற்சாகத்துடன் கூறுகிறார் நாம் தமிழர் கட்சியின் இளைஞர் பாசறை ஒருங்கிணைப்பாளர் இடும்பாவனம் கார்த்தி.

ஆம். தேர்தலுக்குத் தேர்தல் தனது வாக்கு வங்கியைத் தொடர்ந்து உயர்த்திக்கொண்டே வரும் நாம் தமிழர் கட்சி இந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் அதைச் சாதித்துக் காட்டியுள்ளது.

இதன் மூலம் மாநிலக் கட்சி என்ற அந்தஸ்தை பெறும் அளவுக்கான வாக்குகளை அந்தக் கட்சி பெற்றுள்ளது. திமுக, அதிமுக ஆகிய இருபெரும் திராவிடக் கட்சிகள், தமிழ்நாட்டில் வேரூன்ற சகல வழிகளிலும் முயலும் பாஜக ஆகியவற்றின் சவால்களைத் தாண்டி நாம் தமிழர் கட்சி தனது வாக்கு வங்கியைத் தொடர்ந்து அதிகரித்தது எப்படி? நாம் தமிழர் கட்சி இந்த மைல்கல்லை எப்படி எட்டியது?

### பொதுத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி

நாம் தமிழர் கட்சி 2010இல் தொடங்கப்பட்டது. தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் கடந்த 2016ஆம் ஆண்டு முதல் அக்கட்சி தேர்தலில் போட்டியிடத் தொடங்கியது. நாம் தமிழர் கட்சி அந்த ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட்டு 1.1 சதவிகித வாக்குகளைப் பெற்றது. ஓரிடம்கூடக் கிடைக்கவில்லை.

கடந்த 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் மொத்தமுள்ள 40 தொகுதிகளில் நாம் தமிழர் கட்சி ஆண், பெண் இரு பாலருக்கும் சரிபாதி தொகுதிகளை ஒதுக்கியது. அதாவது, அக்கட்சி சார்பில் 20 தொகுதிகளில் ஆண்களும், 20 தொகுதிகளில் பெண்களும் வேட்பாளர்களாகக் களமிறங்கினர்.

கடந்த 2019ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் நாம் தமிழர் கட்சிக்கு 3.9 சதவிகித வாக்குகள் கிடைத்தன. அந்தத் தேர்தலில் முதன் முறையாகக் களமிறங்கிய டிடிவி தினகரனின் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் 5.5 சதவிகித வாக்குகளையும், கமல்ஹாசன் தலைமையிலான மக்கள் நீதி மய்யம் 3.7 சதவிகித வாக்குகளையும் பெற்றன.

அடுத்து வந்த 2021ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி 6.58 சதவிகித வாக்குகளைப் பெற்றது. 170க்கும் அதிகமான தொகுதிகளில் மூன்றாவது இடத்தைப் பிடிக்கும் அளவுக்கு வாக்குகளைப் பெற்றனர். திமுக, அதிமுக ஆகிய கட்சிகளுக்கு அடுத்தபடியாக அதிக வாக்குகளைப் பெற்ற மூன்றாவது பெரிய கட்சியாக நாம் தமிழர் உருவெடுத்தது.

### 2024 நாடாளுமன்றத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளும் நாம் தமிழர் கட்சியினருக்கு உற்சாகம் தரும் வகையிலேயே அமைந்துள்ளன.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் மொத்தமுள்ள 40 தொகுதிகளிலும் சேர்த்து மொத்தம் 32 லட்சத்திற்கும் அதிகமான வாக்குகளை நாம் தமிழர் கட்சி பெற்றுள்ளது.

திருவள்ளூர், சிறிபெரும்புதூர், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், சிவகங்கை, தூத்துக்குடி, தென்காசி ஆகிய 12 தொகுதிகளில் நாம் தமிழர் கட்சி ஒரு லட்சத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுள்ளது.

திருச்சி, நாகப்பட்டினம், ஈரோடு, கள்ளக்குறிச்சி, கன்னியாகுமரி ஆகிய 5 தொகுதிகளில் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் மூன்றாவது இடத்தைப் பிடித்தனர்.


மற்ற 35 தொகுதிகளிலும் அக்கட்சி நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது. மத்திய மற்றும் டெல்டா பகுதிகளில் நாம் தமிழர் கட்சி கணிசமான வாக்குகளைப் பெற்றுள்ளது.

நாம் தமிழர் கட்சியைப் பொருத்தவரை, சிவகங்கை தொகுதியில் அதிகபட்ச வாக்குகளைப் பெற்றுள்ளது. அக்கட்சி வேட்பாளர் எழிலரசி 1,63,412 வாக்குகளுடன் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளார்.

கன்னியாகுமரி தொகுதியில் நாம் தமிழர் கட்சி குறைந்த அளவாக 52,721 வாக்குகள் பெற்றுள்ளது. ஆனாலும்கூட, அதிமுகவை பின்னுக்குத் தள்ளி அக்கட்சி வேட்பாளர் மரியா ஜெனிபர் கிளாரா மைக்கேல் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

சட்டமன்றத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் வரிசையில் நாம் தமிழர் கட்சி சந்தித்த நான்காவது பொதுத் தேர்தல் இது. மாநிலக் கட்சி என்ற அங்கீகாரத்தைப் பெறுவதற்கான குறைந்தபட்ச வாக்கு சதவீதமான 8 வீதத்ழைத இந்தத் தேர்தலில் எட்டியுள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 39 தொகுதிகளிலும் சேர்த்து நாம் தமிழர் கட்சிக்கு 8.1 சதவீத வாக்குகள் கிடைத்துள்ளன. இதன் மூலம் நாம் தமிழர் கட்சி மாநிலக் கட்சி என்று தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்படும் நிலையை எட்டியுள்ளது.



### சின்னம் ஒதுக்குவதில் சர்ச்சை

நாம் தமிழர் கட்சி முந்தைய தேர்தல்களில் போட்டியிட்ட கரும்பு விவசாயி சின்னம் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் கிடைக்கவில்லை. கடந்த ஆண்டு இறுதியில் அந்த சின்னத்தை கர்நாடகாவை சேர்ந்த ஒரு கட்சிக்கு ஒதுக்கிவிட்டதால் நாம் தமிழர் கட்சிக்கு அந்தச் சின்னத்தை ஒதுக்க முடியாது என்று தேர்தல் ஆணையம் கூறியது.

தேர்தல் ஆணையத்தின் முடிவை எதிர்த்து, நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் டெல்லி உயர்நீதிமன்றத்தை நாடினார்.

ஆனால், “தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கையில் என்ன தவறு இருக்கிறது. முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற ஆணையத்தின் நடைமுறையை எந்தக் கட்சிக்காகவும் மாற்ற முடியாது. நாம் தமிழர் கட்சி இன்னும் ஆணையத்தால் அங்கீகரிக்கப்படாத கட்சி. அப்படியிருக்கும்போது எப்படி ஒரு குறிப்பிட்ட சின்னத்தை உரிமை கோர முடியும்?” எனக் கேள்வி எழுப்பிய நீதிமன்றம் மனுவை தள்ளுபடி செய்தது.



நீதிமன்றத்தை நாடியும் விரும்பியது கிடைக்காததால் வேறுவழியின்றி மைக் (ஒலி வாங்கி) சின்னத்தில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளிலும் நாம் தமிழர் கட்சி போட்டியிட்டது. அப்போது பேசிய நாம் தமிழர் கட்சியின் இளைஞர் பாசறை ஒருங்கிணைப்பாளர் இடும்பாவனம் கார்த்தி, ‘கரும்பு விவசாயி சின்னத்தைக் கொடுத்தால் அதிக வாக்குகள் பெற்று நாம் தமிழர் கட்சி அங்கீகரிக்கப்பட்ட கட்சியாவதைத் தடுக்கவே, இப்படி சதி செய்துள்ளார்கள்,' என்று குற்றம் சாட்டியிருந்தார்.

### ‘நீதிமன்றம் தராததை மக்கள் மன்றத்தின் மூலம் பெறுகிறோம்'

தேர்தல் முடிவுகள் வெளியானதற்குப் பின்னர் பேசிய இடும்பாவனம் கார்த்தி, “நாடாளுமன்றத் தேர்தலுக்கான சின்னங்கள் ஒதுக்கீட்டில் எங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது,” என்றார்.

“நாங்கள் தேர்தலில் சின்னங்கள் பயன்படுத்தப்படுவதை எதிர்க்கிறோம். அதற்குப் பதிலாக, மேற்கத்திய நாடுகளைப் போல் ஒவ்வொரு வேட்பாளருக்கு ஒரு எண்ணை ஒதுக்க வேண்டும். அல்லது ஒவ்வொரு தேர்தலின்போதும் கட்சிகளின் சின்னத்தை மாற்ற வேண்டும். அதுதான் தேர்தல் களத்தில் சரிசமமான போட்டிக்கு வழிவகுக்கும். சின்னங்கள் வேட்பாளர்களுக்கு சில சாதகங்களை அளிக்கின்றன என்பதை மறுக்க முடியாது என்கிறார் அவர். ‘விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேட்பாளர்கள் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும்போது வெற்றி எளிதாகக் கிடைக்கும். அதேநேரத்தில், பானை சின்னத்தில் களம் காணும் போது வெற்றி கடினமாவதைப் பார்க்க முடிகிறது.”

இது. அதிமுகவின் இரட்டை இலை சின்னத்திற்கும் பொருந்துவதாகக் கூறும் அவர், சின்னங்கள் பயன்பாட்டுக்[illegible]டு நடைமுறையைப் பின்பற்றி தங்கள் கொள்கைக்கு கரும்பு விவசாயி சின்னமே பொருத்தமானது என்று தீர்மானித்தே அதைத் தேர்வு செய்ததாகக் கூறினார்.

### நாம் தமிழர் கட்சிக்கு தேர்தல் களம் எப்படி இருந்தது?

நாடாளுமன்றத் தேர்தல் களம் நாம் தமிழர் கட்சிக்கு எப்படி இருந்தது என்ற கேள்விக்கு, “இது நாடாளுமன்றத் தேர்தல் களம் என்பதால் சற்று சவாலானதாகவே இருக்கும் என்று கருதினோம். ஏனெனில், நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் வேட்பாளரே பிரதானம். நாங்களோ பாஜகவையோ, காங்கிரசை உள்ளடக்கிய இந்தியா கூட்டணியையோ ஆதரிக்கவில்லை. ஆகவே, மோடி, ராகுல் போன்ற யாரையும் எங்களால் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்த முடியாது.”

ஆனால், ‘எங்கள் எண்ணத்திற்கு மாறாக தேர்தல் களம் எங்களுக்கு மிகுந்த உற்சாகம் தருவதாக அமைந்திருந்தது. முன்பெல்லாம் இளைஞர் மத்தியில் எங்களுக்கு வரவேற்பு அதிகம் இருக்கும். இப்போது குடும்பம் குடும்பமாகப் பலரும் தாமாகவே விரும்பி வந்து கட்சியில் சேர்கின்றனர்.'

“அவர்கள் அனைவரும் தேர்தலில் எங்களை ஆதரித்தனர். திமுக, அதிமுக, காங்கிரஸ், பாஜக போன்ற கட்சிகளைப் போல் எங்களிடம் இல்லாத ஒன்று பணம் மட்டும்தான். ஒவ்வொரு தொகுதியிலும் பெரிய கட்சிகளின் வேட்பாளர்கள் சர்வசாதாரணமாக கோடிகளில் பணத்தைச் செலவழிக்கும்போது எங்களால் லட்சங்களில்கூடச் செலவழிக்க முடியாது,” என்றார்.

### நாம் தமிழர் கட்சியின் வளர்ச்சி சாத்தியமானது எப்படி?

நாம் தமிழர் கட்சி சந்தித்த 4 பொதுத் தேர்தல்களிலும் தொடர்ச்சியாகத் தனது வாக்கு சதவீதத்தை உயர்த்தி வந்துள்ளது. இது எப்படி சாத்தியமானது என்று தமிழ்நாட்டின் அரசியல் நகர்வுகளை உன்னிப்பாகக் கவனிக்கும் மூத்த பத்திரிகையாளர் சிகாமணியிடம் கேட்டபோது, ‘மதவாதம் போல் இனவாதமும் உணர்ச்சி ரீதியாக மக்களை ஈர்க்கக் கூடியது. வளர்ந்த நாடுகளில்கூட இந்தப் போக்கு உள்ளது. அமெரிக்காவில் டிரம்பை கூட நீங்கள் இதற்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். அது போலவே தமிழ்நாட்டிலும் இனவாதம் பேசும் நாம் தமிழர் கட்சி மக்களை ஈர்க்கிறது,” என்றார்.

மேலும், சுய பெருமை பேசுவது ஒன்றும் குற்றம் இல்லை. ஆனால், பிற மாநிலத்தவர் குறிப்பாக வட மாநிலத்தவர் மீது வெறுப்புணர்வை விதைக்கும் வகையில் பேசுவது தவறுஎன்றும் அதைத்தான் இனவாதம் எனக் கூறுவதாகவும் குறிப்பிடுகிறார் சிகாமணி.

அதேபோல், ‘எதிலும் தூய்மைவாதம் பேசும் மக்களின் தேர்வாகவும் நாம் தமிழர் கட்சி இருக்கிறது. அதீத தூய்மைவாதம் பேசும் இவர்கள் கற்பனை உலகில் வாழ்பவர்கள், நிகழ்காலத்தில் எதிலுமே திருப்தி கொள்ளாதவர்கள்.”

‘இனவாதம், தூய்மைவாதம் தாண்டி, இருபெரும் திராவிடக் கட்சிகளுக்கும் மாற்று தேடும் மக்களில் ஒரு பிரிவினரும் நாம் தமிழர் கட்சியை ஆதரிக்கின்றனர். வைகோ, விஜயகாந்த் வரிசையில் இன்று நாம் தமிழர் கட்சியும் அந்த வாக்குகளை அறுவடை செய்கிறது,” என்று கூறினார்.

மேலும் பேசிய அவர், ‘இந்திய ஒன்றியத்தின் ஒரு பகுதியாக உள்ள தமிழ்நாட்டால் சீமான் பேசுவது போல மத்திய அரசைப் புறக்கணித்துவிட்டு எதையும் கண்டுகொள்ளாமல் தனித்து இயங்க முடியாது. நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் வலிமை மிக்க கட்சியாக இருந்தாலும் திமுகவால்கூட மத்திய அரசுக்குப் பெரிய அளவில் அழுத்தம் கொடுக்க முடியவில்லை. அப்படி இருக்கையில், சீமான் மேடைகளில் பேசுவதையெல்லாம் நாம் தமிழர் கட்சியால் செயல்படுத்திவிட முடியுமா?” என்றும் கேள்வி எழுப்பினார்.

### நாம் தமிழர் கட்சியின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

நாம் தமிழர் கட்சியின் வளர்ச்சி தொடருமா என்று கேட்டபோது,’நாம் தமிழர் கட்சியின் வளர்ச்சி கவனிக்கத்தக்க ஒன்றுதான் என்றாலும் ஆட்சியைப் பிடிக்கும் அளவுக்கு பெரிய கட்சியாக வளரும் என்று சொல்ல முடியாது” என்கிறார் பத்திரிகையாளர் சிகாமணி.

“இதுவொரு இடைக்கால வளர்ச்சிதான். வைகோ, விஜயகாந்த் போல மாற்று தேடும் மக்களுக்கும், இனவாத பேச்சுகளால் கவரப்படும் இளைஞர்களுக்கும் வடிகாலாக நாம் தமிழர் கட்சி இருக்கும்.”

அடுத்த கட்டத்திற்கு வளர்வது என்பது நாம் தமிழர் கட்சிக்கு சிரமமான விஷயமாகவே இருக்கும் என்று தெரிவித்தார் சிகாமணி.

சிவகுமார் இராஜகுலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முன்னென்றும் காணாத அரசியல் பரிசோதனையில் இறங்கும் ஜனாதிபதி ரணில்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

இலங்கையில் இதுவரையில் நடைபெற்ற எட்டு ஜனாதிபதி தேர்தல்களில் எந்த ஒன்றின்போதும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக தற்போது நிலவுகின்றதைப் போன்ற குழப்பகரமான அரசியல் சூழ்நிலையை நாம் கண்டதில்லை. நாட்டு மக்களின் மனநிலையை உண்மையில் அறிந்து கொண்டவர்களாகத்தான் அரசியல்வாதிகள் தேர்தல்களைப் பற்றி பேசுகிறார்களா என்று கேட்கவேண்டியிருக்கிறது.

தேர்தல்களைப் பற்றி தினமொரு விசித்திரமான கருத்துக்களை அரசியல்வாதிகள் கூறுகிறார்கள். அந்த கருத்துக்களின் தகுதி எத்தகையதாக இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் ஊடகங்கள் கொடுக்கும் முக்கியத்துவத்துக்கும் குறைவில்லை.

இறுதியாக, ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தேர்தல்கள் தொடர்பில் கருத்தை வெளியிட்டு கடந்த சில நாட்களாக அரசியல் அரங்கில் பெரும் சர்ச்சையை தோற்றுவித்திருந்தார். அவரது கருத்தை அவரது கட்சியே நிராகரித்த பின்னரும் கூட அவர் தன்னை தொடர்ந்தும் நியாயப்படுத்தி வாதிட்டுக்கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவில் மே 28 ஆம் திகதி செய்தியாளர்கள் மகாநாட்டில் உரையாற்றிய ரங்கே பண்டார இவ்வருடம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலும் அடுத்த வருடம் நடத்தப்படவேண்டியிருக்கும் பாராளுமன்ற தேர்தலும் ஒத்திவைக்கப்படவேண்டும் என்றும் ஜனாதிபதியினதும் பாராளுமன்றத்தினதும் பதவிக்காலங்களை இரு வருடங்களால் நீடிக்கவேண்டும் என்றும் ஒரு யோசனையை வெளியிட்டார்.

புத்தளம் மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான ரங்கே பண்டார அவ்வாறு பதவிக் காலங்களை நீடிப்பதற்கு பாராளுமன்றத்தில் சகல கட்சிகளினதும் ஆதரவுடன் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டு மக்களின் அங்கீகாரத்துக்காக சர்வஜனவாக்கெடுப்புக்கும் விடப்படவேண்டும் என்று கூறினார்.

உடனடியாகவே எதிரணி கட்சிகள் கடுமையான கண்டனத்தை வெளியிட்டதுடன் அவரின் யோசனையின் பின்னணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கிறார் என்றும் குற்றஞ்சாட்டவும் தொடங்கின. ரங்கே பண்டார ஐக்கிய தேசிய கட்சியின் ஒரு சாதாரண உறுப்பினர் அல்ல. கட்சியின் பொதுச் செயலாளரான அவர் தன்னால் வெளியிடப்படும் கருத்துக்களுக்கு இருக்கும் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளக்கூடிய அரசியல் முதிர்ச்சியைக் கொண்டவராக இல்லை என்றே தோன்றுகிறது.

ஆனால், அவரின் கருத்துக்கள் தோற்றுவித்திருக்கும் சர்ச்சையினால் தனக்கு ஏற்படக்கூடிய பாதிப்பை உணர்ந்த ஜனாதிபதி விக்கிரமசிங்க தன்னை அதிலிருந்து தூரவிலக்கிக் கொண்டார். அரசியலமைப்பின் பிரகாரம் உரிய நேரத்தில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என்று ஏற்கெனவே பல தடவைகள் கூறிவிட்டதால் ரங்கே பண்டாரவின் கருத்து குறித்து பிரத்தியேமாக எதையும் கூறவேண்டியதில்லை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பிறகு பிரதமர் தினேஷ் குணவர்தனவும் அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரியநேரத்தில் ஜனாதிபதி தேர்தலும் அதைத் தொடர்ந்து பாராளுமன்ற தேர்தலும் நடத்தப்படும் என்று அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தினார்.

இவையெல்லாம் நடந்து முடிந்த பின்னரும் கூட கடந்த வாரம் மீண்டும் ஒரு செய்தியாளர்கள் மகாநாட்டைக் கூட்டிய ரங்கே பண்டார, ஜனாதிபதியினதும் பாராளுமன்றத்தினதும் பதவிக்காலங்களை நீடிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தவேண்டும் என்ற தனது கருத்தை நியாயப்படுத்தினார்.

சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பிலான அரசியலமைப்பு ஏற்பாட்டைப் பற்றி மாத்திரமே பேசியதாகவும் இந்த விடயத்தில் மற்றைய அரசியல் கட்சிகள் அவற்றின் நிலைப்பாடுகளை வெளியிடவேண்டும் என்று கேட்டுக் கொண்டதாகவும் அவர் கூறினார்.

அவரது கருத்தை கண்டனம் செய்த எதிரணி அரசியல்வாதிகளும் அவதானிகளும் 1977 ஜூலை பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி பெற்ற ஆறில் ஐந்து பெரும்பான்மை வெற்றியை அடுத்து அதன் அன்றைய தலைவர் ஜே.ஆர். ஜெயவர்தன தேர்தல் வரைபடத்தை இலங்கை அடுத்த 40 வருடங்களுக்கு சுருட்டிவைக்கமுடியும் என்று கூறியதையும் பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தை ஆறு வருடங்களால் நீடிப்பதற்கு அவரது அரசாங்கம் 1982 டிசம்பரில் படுமோசமான மோசடிகளுக்கு மத்தியில் நடத்திய சர்வஜனவாக்கெடுப்பின் விளைவாக ஏற்பட்ட விளைவுகளையும் நினைவுபடுத்தத் தவறவில்லை.

கடந்த இரு வருடங்களாக ஜனாதிபதி விக்கிரமசிங்க தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வரும் பொருளாதார மீட்சி நடவடிக்கைகளின் இதுவரையான பயன்களை தேர்தல் பிரசாரங்கள் பாதித்துவிடக்கூடும் என்ற அக்கறையே இரு தேசிய தேர்தல்களையும் ஒத்திவைக்கவேண்டும் என்ற யோசனையை முன்வைப்பதற்கு ரங்கே பண்டாரவை தூண்டியிருக்கக்கூடும். ஏற்கெனவே தேர்தல்கள் ஒத்திவைப்பு குறித்தும் தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து பேசிய அரசியல்வாதிகளும் இதே நியாயத்தையே கற்பித்தார்கள்.

மக்கள் தேர்தல்களை அல்ல, மூன்றுவேளை உணவையை கேட்கிறார்கள் என்றும் ரங்கே பண்டார செய்தியாளர்கள் மகாநாட்டில் கூறினார். தேர்தல்களில் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்று ஜனாதிபதி விக்கிரமசிங்கவும் ஏற்கெனவே கூறியிருந்தார்.

சரியாக ஒரு வருடத்துக்கு முன்னர் நுவரேலியாவில் நடைபெற்ற இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தேசிய சட்ட மகாநாட்டில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி நாட்டு மக்களில் இளைஞர்கள் உட்பட அதிகப் பெரும்பான்மையானவர்கள் தேர்தல்களில் மாத்திரமல்ல அரசியல் கட்சிமுறைமையிலும் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்றும் பாராளுமன்றத்தில் உள்ள சகல கட்சிகளும் சேர்ந்து பெறக்கூடிய வாக்குகளும் கூட மொத்த வாக்குகளில் ஐம்பது சதவீதத்தை தாண்டப்போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.



**தனது கட்சி பலவீனமடைந்திருக்கும் நிலையில் வேறு கட்சிகளைச் சேர்ந்தோரின் ஆதரவுடன் ஜனாதிபதி தேர்தலில் சுயாதீனமான பொதுவேட்பாளராக களமிறங்கி மக்களின் பெரும் ஆதரவுடன் ரணில் வெற்றி பெறுவாரேயானால் அது பெரிய ஒரு அரசியல் சாதனையாகவே இருக்கும்.**

அரசாங்கத்தின் பங்காளிகளான ஜனாதிபதியின் ஐக்கிய தேசிய கட்சியும் ராஜபக்சாக்களின் சிறிலங்கா பொதுஜன பெரமுனவும் தேர்தல்களுக்கு முகங்கொடுப்பதற்கு அஞ்சுகின்றன என்பது ஒன்றும் இரகசியமல்ல. எந்த தேர்தலையும் எந்த நேரத்திலும் சந்திக்க தாங்கள் தயார் என்று அடிக்கடி கூறுகின்ற ராஜபக்சாக்கள் கடந்த வருட முற்பகுதியில் நடத்தப்படவிருந்த உள்ளூராட்சி தேர்தல்கள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுவதற்கு காரணமாக அமைந்த ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் அடாத்தான நடவடிக்கைகளுக்கு முழுமையாக ஒத்துழைத்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

தேர்தல்களுக்கு முகங்கொடுக்காமல் இருப்பதற்காக ஜனாதிபதியும் அரசாங்கமும் எத்தகைய ஜனநாயக விரோத நடவடிக்கைகளிலும் இறங்கத் தயங்கமாட்டார்கள் என்பது உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு எடுத்த நடவடிக்கைகளுக்கு அவர்கள் ஏற்படுத்திய முட்டுக்கட்டைகள் தெளிவாக உணர்த்துகின்றன. உள்ளூராட்சி தேர்தல்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை திறைசேரி நிறுத்திவைக்கக்கூடாது என்று உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவையும் அரசாங்கம் மீறியது.

'அறகலய' மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு நாட்டு மக்களின் அரசியல் சிந்தனைகளில் ஏற்பட்டிருக்கக்கூடிய மாற்றங்களையும் தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பிலான அவர்களின் எண்ணத்தையும் அறிந்து கொள்வதற்கான வாய்ப்பை உள்ளூராட்சி தேர்தல்கள் நிச்சயமாக வழங்கியிருக்கும். ஆனால் அந்த வாய்ப்பை மக்களிடம் இருந்து பறித்தது மாத்திரமல்ல மாகாணசபை தேர்தல்களையும் நீண்டகாலமாக நடத்தாமலும் இருக்கும் அரசாங்கமோ அல்லது அதைச் சார்ந்த அரசியல்வாதிகளோ நாட்டு மக்கள் தேர்தல்களை விரும்பவில்லை என்று கூறுவதற்கு உண்மையில் அருகதையற்றவர்கள்.

ஆனால், ஒரு வித்தியாசம். மற்றைய தேர்தல்களைப் பற்றி பேசாவிட்டாலும் ஜனாதிபதி விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தல்களைப் பற்றி தொடர்ச்சியாகப் பேசிவந்திருக்கிறார். அதற்கு காரணம் அவரின் அரசியல் எதிர்காலத்துடன் அந்த தேர்தல் சம்பந்தப்பட்டதாக இருப்பதேயாகும்.

ஆனால், ஜனாதிபதியாக விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னரான கடந்த இரு வருடகாலத்தில் அரசாங்க அரசியல்வாதிகள் தேசிய தேர்தல்களை ஒத்திவைக்கும் உள்நோக்கத்துடன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது குறித்தும் தேர்தல் சீர்திருத்தங்களைக் கொண்டுவருவது குறித்தும் அடிக்கடி பேசிவந்திருக்கிறார்கள். ஆனால் எதிர்ப்புகள் கிளம்பியதை அடுத்து அவர்கள் அதைக் கைவிட்டார்கள்.

சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இளம் சட்டத்தரணிகளுடனான சந்திப்பில் உரையாற்றிய ஜனாதிபதி விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவிருப்பதாக அறிவித்திருக்கும் எந்தவொரு வேட்பாளரும் ஜனாதிபதி பதவிக்குரிய நிறைவேற்று அதிகாரங்களை ஒழிப்பது குறித்து எதுவும் பேசுவதில்லை என்று கூறியிருந்தார். அவர்கள் நிறைவேற்று அதிகாரங்களை ஒழிப்பதற்கு முன்வந்தால் அதற்கான சட்டவாக்க செயன்முறைகளை முன்னெடுப்பதற்கு தேவையான கால அவகாசத்தைக் காரணம் காட்டி தேர்தலை ஒத்திவைக்கலாம் என்ற எதிர்பார்ப்பில்தான் அவ்வாறு அவர் கூறினாரோ தெரியவில்லை.

கடந்த வருட பிற்பகுதியில் நீதியமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ச பாராளுமன்ற தேர்தல்களை முன்னைய தொகுதி முறையையும் தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையையும் உள்ளடக்கிய கலப்புமுறையின் கீழ் நடத்துவதற்கான சீர்திருத்த யோசனைகளை முன்வைத்தது எமக்கு நினைவிருக்கிறது.

ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளரும் பாராளுமன்றத்தில் அதன் ஒரேயொரு உறுப்பினராகவும் இருக்கும் வஜிர அபேவர்தன எல்லாவற்றுக்கும் மேலாக அடுத்த ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக எவரும் களமிறங்காமல் அவர் போட்டியின்றி ஜனாதிபதியாக தெரிவாவதற்கு வழிவிடவேண்டும் என்று ஒரு தடவை கேட்டிருந்தார். ஜனாதிபதி தேர்தலை இந்த வருடம் நடத்தினால் பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்கத்திடம் நிதியில்லாமல் போகும் என்றும் கூட அபேவர்தன கூறினார். தேர்தல்களை நடத்தவேண்டும் என்று கோருபவர்கள் நாட்டை நிலைகுலைய வைக்கவே விரும்புகிறார்கள் என்று அவர் கூறியதும் பதிவில் இருக்கிறது.

ஜனாதிபதி விக்கிரமசிங்கவை மேலும் பல வருடங்களுக்கு ஆட்சிசெய்ய அனுமதித்தால் ஐரோப்பிய பெண்கள் இலங்கைக்கு வந்து வீட்டுப் பணிப்பெண்களாக பணியாற்றக்கூடிய அளவுக்கு நாட்டை பொருளாதார சுபிட்சமுடையதாக மாற்றிக்காட்டுவார் என்று கூட ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் கூறினார்.

இவ்வாறாக ஐக்கிய தேசிய கட்சி அரசியல்வாதிகள் கருத்துக்களை தெரிவித்துவரும் தொடரில் பிந்தியதாக ரங்கே பண்டாரவின் யோசனை வந்திருக்கிறது. ஒருபுறத்தில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களை

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற - மாகாண தேர்தல்களிலும் பொதுவேட்பாளர் முறைமை வருமானால் தங்களின் எதிர்காலத்தை நினைத்து 'இவர்கள்' அச்சமடைகின்றார்களா?

**பனங்காட்டான்**

படிமுறை வளர்ச்சி என்று தமிழில் ஒரு சொற்பதம் உண்டு. எதனையும் எழுந்தமானமாக செய்யாமல் நிதானமாக திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி ஒரு காரியத்தை வெற்றிகரமாக மேற்கொள்வது என்பது இதன் அர்த்தம்.

இலங்கையின் ஜனாதிபதி தேர்தலுக்கு திகதி குறிப்பிட்ட காலத்துக்கு மாதங்கள் நெருங்கிக் கொண்டிருக்கையில், இனரீதியாக இரு தரப்பிலும் படிமுறை வளர்ச்சி கைக்கொள்ளப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இதற்கு உதாரணமாக ஜனாதிபதி ரணில் தரப்பையும், தமிழ் பொதுவேட்பாளர் தரப்பையும் குறிப்பிடலாம். இவ்விரு தரப்பும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதை அதிகாரபூர்வமாக அறிவிக்கவில்லை. ஆனால், நாலாபக்கத்தாலும் நாடி பிடித்து, இரத்தோட்டத்தை அளந்து கொண்டிருக்கின்றனர்.

சில வாரங்களுக்கு முன்னர் அமைச்சரவை கூட்டத்தில் ஜனாதிபதி தேர்தலே முதலில் இடம்பெறுமென்பதை ரணில் அறிவித்தார். ஜனாதிபதி தேர்தல் பிற்போடப்படுமா என்ற சர்ச்சை (இதனை உருவாக்கியவரே ரணிலின் கட்சியின் செயலாளரான பாலித ரங்கே பண்டாரவே) கிளம்பியபோது, நேரடியாக பதிலளிக்காது தமது அலுவலக அறிக்கையூடாக திட்டமிட்டவாறு ஜனாதிபதி தேர்தல் நடைபெறுமென்று ரணில் அறியக்கொடுத்தார்.

ஆனால் இன்னமும் தாம் போட்டியிடப் போவதை நேரடியாக அவர் அறிவிக்கவில்லை. அநேகமாக யூலை மாதத்தில் அவர் அறிவிப்பாரென அவருடைய நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ரணில் தமது முடிவை அறிவிப்பதை இழுத்தடிக்க, மகிந்த ராஜபக்ச தரப்பும் தங்கள் பக்க முடிவை அறிவிப்பதை பின்போடுகிறது. சிலவேளைகளில் இரண்டும் இணைவதற்கான தேவையாகவும் இருக்கலாம்.

தமது தேர்தல் பரப்புரைகளுக்கு வடக்கில் பிள்ளையார் சுழி போட்ட ரணில், தேர்தலுக்கான அலுவலகத்தை உத்தியோகபூர்வமாக இப்போது திறந்து வைத்துள்ளார். அவரது மனைவி, கட்சியின் அக்கிராசனர், பிரதம ஆலோசகர், பிரதமர், சில அமைச்சர்கள் உட்பட பொதுஜன பெரமுனவின் சில தலைகளையும் இந்நிகழ்வில் காண முடிந்தது. முக்கியமான ஒருவரை இந்நிகழ்வில் காணவில்லை. ஜனாதிபதி தேர்தலையும் நாடாளுமன்றத் தேர்தலையும் இரண்டு வருடங்களுக்குப் பின்போட வேண்டுமென்ற கருத்தை முன்வைத்து, பலரையும் விழி பிதுங்க வைத்த ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளர் ரங்கே பண்டார ஏன் தலைமறைவானார் என்பது தெரியவில்லை.


கட்சியின் தேர்தல் அலுவலகத்தைத் திறந்ததன் ஊடாக ரணில் போட்டியிடுவாரென்பது உறுதியாகியுள்ளது. "ரயில் ஓடத்தொடங்கிவிட்டது' ஏறுபவர்கள் ஏறலாம், இடையிலும் ஏறலாம், எல்லோருக்காகவும் அதன் கதவுகள் திறந்துள்ளன" என்ற பாணியில் மாற்றுக் கட்சியினரை உள்வாங்கும் வேலைக்கு இந்த அலுவலகம் முக்கியமானது.


சில வாரங்கள் பலருக்கும் அவகாசம் கொடுத்து, இறுதியில் யாருடன் கூட்டுச் சேர்வது என்பதை தீர்மானிப்பதே ரணிலின் இலக்கு. இப்போது சஜித் பிரேமதாசவை இவருடன் இணைப்பதற்கு திரைக்குப் பின்னால் ரகசியப் பேச்சுகள் இடம்பெறுகின்றன. அதேசமயம் பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்களுடனும் இவர் பேசிக் கொண்டிருக்கிறார்.

சில மாதங்களுக்கு முன்னர் சஜித்தும் ரணிலும் தனிமையில் சந்தித்து பேச்சு நடத்தினர். ரணிலுடன் சஜித் அணி இணையப் போவதாகவும் அப்போது ஒரு பேச்சு அடிபட்டது. இவர்களின் பேச்சுவார்த்தையின் ஒரு கட்டத்தில் தனது கட்சியை பிளவுபடுத்தி எவரையும் இழுத்தெடுக்க வேண்டாமென்று சஜித் ரணிலிடம் நேரடியாகவே வேண்டினார். அப்போது ரணில் - நான் எவரையும் இழுத்தெடுத்து உங்கள் கட்சியை பிளவுபடுத்த மாட்டேன். உங்கள் கட்சி ஆட்களை கவனமாக நீங்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டுமென்ற சஜித்தின் கேள் விக்கு பல ஊகங்கள் தொக்கி நிற்கும் வகையில் பதில ளித்தார்.

இப்போது எல்லா வகையான நாடகங்களுமே தெற்கில் நடைபெறுகின்றன. பல கட்சிகளும் சொரியல்களும் தேர்தலுக்காக கூட்டாக இணைவதும், மந்திகளிலும் பார்க்க வேகமாக தாவுவதற்கு பலர் தயாராக இருப்பதும், ஒரு சிலர் கட்சி மாறி பாய்வதும் காணப்படுகிறது. தமிழர் தரப்பிலிருந்தும் ஒரு சிலர் தாவுவதற்கு தயாராக இருப்பதாக நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதனாற்தான் ரணில் எந்தக் கட்சி வேட்பாளராகவும் நிற்காது பொதுவேட்பாளராகவே போட்டியிடுவாரென்று அவரது கட்சியின் பிரமுகர்கள் அடிக்கடி சொல்லி வருகின்றனர். ஒரு கட்சியின் தலைவராக இருக்கும் ரணில், சிங்களத் தரப்பின் பொதுவேட்பாளராக போட்டியிடப் போகிறார் என்றே இதனைக் கூற வேண்டும்.







இந்தத் தளத்தில் நின்று தமிழர் தேச (தேசிய) அரசியல் போக்கையும், தமிழ் வேட்பாளர் முன்னெடுப்பையும் உள்நோக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. சிங்கள தேசம் தங்களுக்கான ஆட்சித் தலைவரை பொதுவேட்பாளர் என்ற போர்வையில் நிறுத்தி ஆட்சியை வயப்படுத்த முயற்சிக்கிறது. ஆனால் தமிழர் தரப்பில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டுமென்று முதன்முறையாக எடுக்கப்படும் முயற்சிக்கு சில கறுப்பு ஆடுகள் முட்டுக்கட்டை போட்டு சிதறடிக்க முயல்கின்றன.

ஆனாலும் பொதுவேட்பாளர் என்ற முன்னெடுப்பு எதிர்பார்த்ததிலும் பார்க்க வேகமாக சென்று கொண்டிருக்கிறது. தமிழர் தரப்பில் அரசியல் துாரப்பார்வை கொண்ட முயற்சி அதன் இலக்கை நோக்கி நேர்த்தியாகச் செல்வது தெரிகிறது. வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டணி ஆரம்பத்திலிருந்தே முழுமையாக இதனை ஆதரித்து வருகிறது. தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜா, புதிய தலைவராகத் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகியோர் கொள்கை ரீதியாக இதனை ஆதரித்துள்ளனர். கிழக்கிலங்கையைச் சேர்ந்த மூத்த தமிழ் அரசியல்வாதிகள் சிலரும் தங்கள் ஆதரவை பகிரங்கப்படுத்தியுள்ளனர்.

புதிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளிகளான ரெலோ, புளொட் ஆகிய இரண்டும் தங்கள் அமைப்பின் கூட்டத்தை நடத்தி பொதுவேட்பாளரை ஆதரிப்பதாக அறிக்கை வாயிலாக தெரியப்படுத்தியுள்ளனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (தமிழ் காங்கிரஸ்) வழமை போன்று எந்தப் பக்க சார்புமின்றி ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்கும் நிலைப்பாட்டை இறுக்கமாக கடைப்பிடிக்கிறது. இதனை பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த துண்டுப் பிரசுர பரப்புரையையும் இது ஆரம்பித்துள்ளது.

ஆக, தமிழ்த் தேசியம் என்ற வட்டத்துக்குள் இருந்து கொண்டு இதனை எதிர்ப்பவர்களை ஒரு கை விரல்களுக்குள் அடக்கிவிடலாம். தமிழரசு கட்சியின் மூத்த தலைவர் என்று அழைக்கப்படும் திருமலை எம்.பி.சம்பந்தன், அக்கட்சியின் மூத்த துணைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம், தேசியப் பட்டியலுாடாக கட்சிக்குள் இணைந்த நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோரே தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை எதிர்த்து வருபவர்கள். இவர்களுக்குள் எதிர்ப்பை வெளியிட்ட முதலாவது ஆள் யாரென்ற ஒரு வகைப் போட்டியையும் காண முடிகிறது.

சில விடயங்களில் இவர்கள் மூவரும் நீண்டகாலமாக ஒத்த கருத்துள்ளவர்களாகவே அடையாளம் காணப்பட்டுள்ளனர். அண்மையில் இடம்பெற்ற தமிழரசு கட்சி தலைவர் போட்டியில் சுமந்திரனின் வேட்பு மனுவில் முதல் ஒப்பமிட்டு ஆதரித்தவர் சீ.வி.கே.சிவஞானம். வருங்காலத்தில் இவ்வாறான எதனையும் தாம் செய்யப் போவதில்லையென அண்மையில் இவர் தெரிவித்ததையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

சிங்களத் தலைவர்களுடன் பேரம் பேசித்தான் தமிழர் ஏதாவது பெற வேண்டும், தமிழ் பொதுவேட்பாளர் போட்டியிடுவதால் இனவாதம் துாண்டப்படும் என்றெல்லாம் வெவ்வேறான கருத்துகளை கூறிவரும் எதிர்ப்பாளர்கள், கடந்த 75 ஆண்டுகளில் செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்கும், சாத்வீக போராட்டங்களுக்கும் என்ன நடைபெற்றது என்பதை மறந்துவிட்டனர்போல் தெரிகிறது.

ஆனால், தமிழர் சமூகத்தின் 83 பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களும் அண்மையில் கூடி கலந்துரையாடி தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை முன்னெடுக்க தமிழர் பொதுச்சபைக்கு 25 பேரைக் கொண்ட ஒருங்கிணைப்புக் குழுவை உருவாக்கியுள்ளனர்.

இதற்குச் சில நாட்களுக்கு முன்னர் பல்கலைக்கழக தமிழ் மாணவர் அமைப்பு விடுத்த ஆதரவு அறிக்கையில் பொதுவேட்பாளர் கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட வேண்டுமென்ற ஆரோக்கியமான ஆலோசனையை முன்வைத்துள்ளது.

இவ்வாறு பல முனைகளிலிருந்தும் பொதுவேட்பாளருக்கு ஆதரவு வலுவடைந்து வரும் வேளையில் தமிழரசுக் கட்சியின் மூவர் மட்டும் எதற்காக இதனை எதிர்க்கிறார்கள். வடக்கு கிழக்கில் எத்தனை சதவீதத்தை பொது வேட்பாளரால் பெறமுடியுமென்றும் சிலர் கேள்வி கேட்கின்றனர். இலங்கையின் இனவீதாசாரத்தில் தமிழ் வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதியாக முடியாதென்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், தமிழரின் வாக்கைப் பெற்று, தமிழரைத் தொடர்ந்து ஏமாற்ற ஒரு சிங்களவர் முதற்சுற்றிலேயே ஐம்பது வீத வாக்குகளுடன் வெற்றி பெற வேண்டுமென்பதுதான் இதனை எதிர்ப்பவர்களின் நோக்கமா?

ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களின் பெயர்கள் வெளிவந்த பின்னர் அவர்களுடன் உரையாடிய பின்னரே யாரை ஆதரிப்பது என்பதை தீர்மானிக்க முடியுமென கூறிவரும் சம்பந்தன், அதற்கு முன்னர் எதற்காக அவசரப்பட்டு தமிழ் பொதுவேட்பாளரை எதிர்க்கிறார் என்பது புரியவில்லை.

தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்த அனுமதித்தால், இனி வரப்போகும் நாடாளுமன்ற, மாகாணசபைத் தேர்தல்களிலும் வடக்கு கிழக்கில் தமிழ் பொதுவேட்பாளர்களையே நிறுத்த வேண்டுமென்ற குரல் ஓங்கும். இந்நிலைமை உருவாகுமானால் கட்சிகளுக்குள் ஒளித்திருந்து கதிரைகளைப் பெற ஆசை கொள்பவர்களின் எதிர்காலம் இருளடைந்துவிடும் என்பதால்தான் பொதுவேட்பாளரை இவர்கள் எதிர்க்கிறார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலஸ்தீன நெருக்கடிக்கு 'இரு அரசுத் தீர்வு' காண்பதில் தற்போது உள்ள முட்டுக்கட்டைகள்!

ஸ்ரான்லி ஜொனி

இஸ்ரேல் மீது ஹமாஸ் இயக்கம் 2023 அக்டோபர் 7 ஆம் திகதி மேற்கொண்ட தாக்குதலும் காசா மீது இஸ்ரேல் தொடர்ந்து நடத்திவருகின்ற போரும் பாலஸ்தீனப் பிரச்சினையை மேற்காசியாவில் மீண்டும் முன்னரங்கத்துக்கு கொண்டு வந்திருக்கின்றன. போர் காசாவின் பெரும் பகுதியை நிர்மூலம் செய்ததுடன் அதன் மக்களில் 36 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களை கொன்றொழித்திருக்கும் நிலையில்,எதிர்காலப் பாலஸ்தீன அரசு ஒன்றுக்கான உறுதியான ஆதரவுக்குரலை கூடுதலான நாடுகள் கொடுப்பதை உலகம் காண்கிறது.

அண்மையில் மூன்று ஐரோப்பிய நாடுகளான ஸ்பெயின்,நோர்வே மற்றும் அயர்லாந்து ஆகியவை பாலஸ்தீன அரசை அங்கீகரித்திருக்கினறன. பாலஸ்தீனப் பிரச்னை தீர்த்துவைக்கப்படாவிட்டால் பிராந்தியத்தில் நிலையான அமைதி ஒருபோதும் ஏற்படப்போவதில்லை என்று சவூதி அரேபியா, ஜோர்தான் உட்பட அரபு நாடுகள் கூறுகின்றன. நெருக்கடிக்கு சர்வதேச அங்கீகாரத்துடனான ஒரு தீர்வு என்றால் அது இரு அரசு தீர்வேயாகும்.

### இரு அரசு தீர்வு என்றால் என்ன?

இந்த கேள்விக்கு சுருக்கமான பதில் சுலபமானது. வரலாற்று ரீதியான பாலஸதீனத்தை அதாவது கிழக்கே ஜோர்தான் ஆற்றுக்கும் மேற்கே மத்தியதரைக் கடலுக்கும் இடையிலான நிலத்தை ஒரு அரபு அரசாகவும் ஒரு யூத அரசாகவும் பிரிப்பதே அந்த இரு அரசு தீர்வாகும். ஆனால் நீண்ட பதில் சிக்கலானதாகும்.

இஸ்ரேல் என்ற யூத அரசு 1948 ஆம் ஆண்டில் பாலஸ்தீனத்தில் உருவாக்கப்பட்டது. ஆனால் பாலஸ்தீன அரசு இன்னமும் ஒரு யதார்த்தமாகவில்லை. 1967 ஆம் ஆண்டு முதல் பாலஸ்தீனப் பிராந்தியங்கள் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பின் கீழேயே இருந்துவருகின்றன. அதனால், ஐக்கிய நாடுகள் சாசனத்தின் கீழ் வேறு எந்தவொரு தேசத்தையும் போன்று முழுமையான உரிமைகளை அனுபவிக்கின்ற சட்ட ரீதியான நியாயப்பாடும் இறைமையும் கொண்ட ஒரு பாலஸ்தீன அரசை உருவாக்குவதே இன்றைய நிலையில் இரு அரசு தீர்வு என்பதன் அர்த்தமாகும்.

### தோற்றுவாய்கள் எவை?

இரு அரசு தீர்வின் தோற்றுவாயை 1930 களில் பின்னோக்கியே தேடவேண்டும். அப்போது பாலஸ்தீனத்தை பிரிட்டிஷார் ஆட்சி செய்தார்கள். பாலஸ்தீனத்தில் அரபுக்களுக்கும் யூதர்களுக்கும் இடையிலான மோதல்களுக்கான காரணங்களை ஆராய்வதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம 1936 ஆம் ஆண்டில் வில்லியம் றொபேர்ட் பீல் பிரபு தலைமையில் ஒரு ஆணைக்குழுவை நியமித்தது. அது பீல் ஆணைக்குழு என்றே பிரபல்யமானது.

ஒரு வருடத்துக்கு பிறகு ஆணைக்குழு பாலஸ்தீனத்தை யூத அரசாகவும் அரபு அரசாகவும் பிரிக்கவேண்டும் என்ற யோசனையை முன்வைத்தது. அந்த நேரத்தல் பாலஸ்தீன சனத்தொகையில் யூதர்கள் சுமார் 28 சதவீதத்தினராக இருந்தனர். பீல் ஆணைக்குழுவின் யோசனையின் பிரகாரம் மேற்கு ஆற்றங்கரை, காசா பள்ளத்தாக்கு மற்றும் நெகெவ் பாலைவனம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அரபு அரசும் பாலஸ்தீனக் கரையோரத்தின் பெரும் பகுதியையும் வளமிக்க கலீலி பிராந்தியத்தையும் உள்ளடக்கியதாக யூத அரசும் அமையவேண்டும். அரபுக்கள் அந்த யோசனையை நிராகரித்தனர்.

இரண்டாவது உலகப்போருக்கு பிறகு பாலஸ்தீனம் தொடர்பான ஐக்கிய நாடுகள் விசேட ஆணைக்குழு இன்னொரு பிரிவினைத் திட்டத்தை முன்வைத்தது. ஒரு யூத அரசு, ஒரு அரபு அரசு, ஒரு சர்வதேசப் பிராந்தியம் (ஜெரூசலேம்) என்று பாலஸதீனத்தை மூன்று பிராந்தியங்களாகப் பிரிக்கவேண்டும் என்பதே அந்த திட்டம்.

அதன் பிரகாரம் பாலஸ்தீன சனத்தொகையில் சுமார் 32 சதவீதமானவர்களாக இருந்த யூதர்களுக்கு பாலஸ்தீன நிலத்தின் 56 சதவீதம் சென்றடையும். அந்த பிரிவினைத் திட்டம் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் (தீர்மானம் 181) ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரபுக்கள் திட்டத்தை நிராகரித்த அதேவேளை பாலஸ்தீனத்தில் இருந்த இஸ்ரேலிய குடியேற்றவாசிகளின் சியோனிச தலைமைத்துவம் அதை ஏற்றுக்கொண்டது. (இந்தியா திட்டத்துக்கு எதிராகவே பொதுச்சபையில் வாக்களித்தது.)

சியோனிஸ்டுகள் 1948 மே 14 ஆம் திகதி ஒருதலைப்பட்சமாக இஸ்ரேலிய அரசை பிரகடனம் செய்தனர். அதையடுத்து முதலாவது அரபு - இஸ்ரேல் யுத்தம் மூண்டது. 1949 ஆண்டில் போர்நிறுத்த உடன்படிக்கை எட்டப்பட்ட வேளையில், இஸ்ரேல் ஐக்கிய நாடுகள் திட்டத்தில் கூறப்பட்டிருந்ததையும் விட சுமார் 22 சதவீதமான நிலப்பிராந்தியத்தை கூடுதலாக இஸ்ரேல் கைப்பற்றிவிட்டது.

### சர்வதேச சட்டபூர்வத்தன்மை

1967ஆம் ஆண்டில் ஆறு நாள் போரில் ஜோர்தானிடமிருந்து மேற்கு ஆற்றங்கரை மற்றும் கிழக்கு ஜெரூசலேத்தையும் எகிப்திடமிருந்து காசா பள்ளத்தாக்கையும் சினாய் குடாவையும் சிரியாவிடமிருந்து கோலான் குன்றையும் இஸ்ரேல் கைப்பற்றியது. (1978 காம்ப்டேவிட் உடன்படிக்கைக்கு பிறகு எகிப்துக்கு திருப்பிக் கொடுக்கப்பட்ட சினாயைத் தவிர ஏனைய பிராந்தியங்கள் தொடர்ந்தும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டின் கீழேயே இருக்கின்றன) பாலஸ்தீன தேசியவாதம் 1960 களில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைமைத்துவத்தின்




**கட்டமைப்பு ரீதியான காரணகள் இரு அரசு தீர்வை களத்தில் சிக்கலாக்கியிருக்கும் அதேவேளை எந்த விட்டுக்கொடுப்பையும் செய்வதற்கு இஸ்ரேலிய வலதுசாரி தலைமைத்துவம் தயாராயில்லை.**



(பீ.எல். ஓ.) கீழ் பலம்பொருந்தியதாக வெளிக்கிளம்பியது.

தொடக்கத்தில் பீ.எல்.ஓ. முழுப் பாலஸ்தீனத்தினதும் 'விடுதலையைக்' கோரியது. ஆனால் பிறகு 1967 எல்லைகளின் அடிப்படையில் இரு அரசு தீர்வை அங்கீகரித்தது. பாலஸ்தீனர்களின் எந்தவொரு நிலக் கோரிக்கையையும் தொடக்கத்தில் நிராகரித்த இஸ்ரேல் பீ.எல்.ஓ.வை பயங்கரவாத இயக்கம் என்று தொடர்ந்து கூறிவந்தது.

ஆனால், எகிப்தும் சிரியாவும் தாக்குதல் ஒன்றைத் தொடுத்து இஸ்ரேலை அதிர்ச்சியடையவைத்த 1973 யொம் கிபூர் போரைத் தொடர்ந்து செய்துகொள்ளப்பட்ட காம்ப்டேவிட் உடன்படிக்கையில் சமாதானத்துக்கான மத்திய கிழக்கு உடன்படிக்கைக் கட்டமைப்பு ஒன்றுக்கு இஸ்ரேல் இணங்கிக்கொண்டது. அந்த கட்டமைப்பின் ஒரு அங்கமாக மேற்கு ஆற்றங்கரையிலும் காசாவிலும் பாலஸ்தீன சுயாட்சி அதிகாரசபை ஒன்றை அமைப்பதற்கும் 1967 ஆம் ஆண்டில் கைப்பற்றிய சகல பிராந்தியங்களில் இருந்தும் படைகளை வாபஸ்பெற வேண்டும் என்று இஸ்ரேலைக் கோரிய ஐக்கிய நாடுகளின் தீர்மானத்தை (242) நடைமுறைப்படுத்துவதற்கும் இஸ்ரேல் இணங்கிக்கொண்டது.

அந்த கட்டமைப்பு 1993 ஆம் ஆண்டிலும் 1995 ஆம் ஆண்டிலும் ஒஸ்லோ உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படுவதற்கான அத்திபாரத்தை அமைத்தது. அந்த உடன்படிக்கைகள் இரு அரசு தீர்வுக்கு முறைப்படியான அந்தஸ்தைக் கொடுத்தன. ஒஸ்லோ செயன்முறைகளின் ஒரு அங்கமாக மேற்கு ஆற்றங்கரையிலும் காசாவிலும் சுயாட்சி அமைப்பான பாலஸ்தீன அதிகாரசபை அமைக்கப்பட்டது. பாலஸ்தீனர்களின் பிரதிநிதித்துவ அமைப்பாக பீ.எல்.ஓ.வுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்தது. இஸ்ரேலிய அரசுக்கு அருகாக சமாதானமான முறையில் இறைமையுடன் கூடிய பாலஸ்தீன அரசு ஒன்று அமைவதற்கு ஒஸ்லோவில் உறுதியளிக்கப்பட்டது. ஆனால் அந்த உறுதிமொழி ஒருபோதும் நடைமுறைச் சாத்தியமாகவில்லை.

### இரு அரசு தீர்வுக்கான தடைகள்

உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்ட இஸ்ரேலிய பிரதமர் யிற்சாக் றாபின் யூத தீவிரவாதி ஒருவனால் 1995 ஆம் ஆண்டில் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். அவரின் கொலை ஒஸ்லோ செயன்முறைகளுக்கு முதலாவது பின்னடைவாக அமைந்தது. அடுத்து வந்த தேர்தலில் றாபினின் தொழிற்கட்சி தோல்வியடைந்து பெஞ்சமின் நெதான்யாகுவின் தலைமையின் கீழ் வலதுசாரி லிகுட் கட்சி அதிகாரத்துக்கு வந்தது.

இஸ்ரேலியர்களுக்கு பீ.எல். ஓ. பெருமளவு சலுகைகளை கொடுத்துவிட்டது என்று கூறி ஒஸ்லோ உடன்படிக்கைகளை எதிர்த்த இஸ்லாமிய தீவிரவாதக் குழுவான ஹமாஸின் எழுச்சியும் சமாதான செயன்முறைகள் தடம்புரளுவதற்கு பங்களிப்பைச் செய்தது. 1900 களில் ஒஸ்லோ செயன்முறைகளின் வீழ்ச்சிக்கு பிறகு இரு அரசு கொள்கைக்கு புத்தூக்கம் அளிப்பதற்கு பல்வேறு இராஜந்திர முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் அந்த முயற்சிகளில் எந்த ஒன்றினாலும் இலக்கை அடைவதை நோக்கி முன்னேற்றத்தைக் காணமுடியவில்லை.

இந்த தோல்விக்கு பல்வேறு காரணங்களை அடையாளம் காணமுடியும். ஆனால் பிரத்தியேகமான கட்டமைப்புரீதியான காரணிகள் குறைந்த பட்சம் தற்போதைக்கு இரு அரசு தீர்வை அடையமுடியாமல் செய்கின்றன. ஒன்று எல்லைகள். இஸ்ரேலுக்கு தெளிவாக வரையறுக்கப்பட்ட எல்லைகள் இல்லை. அது அடிப்படையில் ஒரு விஸ்தரிப்புவாத அரசு. 1948 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளினால் உறுதியளிக்கப்பட்டதை விடவும் கூடுதலான பிராந்தியங்களை இஸ்ரேல் கைப்பற்றியது. 1967 ஆம் ஆண்டில் வரலாற்று ரீதியான பாலஸ்தீனம் முழுவதையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்ததன் மூலம் இஸ்ரேல் தன்னை மேலும் விரிவுபடுத்திக் கொண்டது.

1970 களில் இருந்து பாலஸ்தீனப் பிராந்தியங்களில் இஸ்ரேல் யூதக் குடியேற்றங்களை நிர்மாணித்து வந்திருக்கிறது. தங்களது எதிர்கால அரசு 1967 ஆண்டின் எல்லைகளின் அடிப்படையில் அமையவேண்டும் என்று பாலஸ்தீனர்கள் கூறுகின்ற அதேவேளை, அது தொடர்பில் எந்த உறுதிப்பாட்டையும் தெரிவிக்க இஸ்ரேல் தயாராக இல்லை.

இரண்டாவது காரணி குடியேற்றவாசிகள் சம்பந்தப்பட்டதாகும். மேற்கு ஆற்றங்கரையிலும் கிழக்கு ஜெரூசலேத்திலும் தற்போது சுமார் ஏழு இலட்சம் யூத குடியேற்றவாசிகள் வசிக்கிறார்கள். 1967 ஆம் ஆண்டின் எல்லைகளுக்கு இஸ்ரேல் வாபஸ்பெறுவதாக இருந்தால் இந்த குடியேற்றவாசிகளையும் திருப்பியழைத்துக் கொள்ளவேண்டும். இன்று குடியேற்றவாசிகள் இஸ்ரேலிய சமூகத்தில் பலம்பொருந்திய ஒரு அரசியல் வர்க்கத்தினராக விளங்குகிறார்கள். அரசியல் விளைவுகளுக்கு முகங்கொடுக்காமல் எந்த இஸ்ரேலியப் பிரதமரும் குடியேற்றவாசிகளை திருப்பியழைத்துக் கொள்ளமுடியாது.

மூன்றாவது காரணி ஜெரூசலேத்தின் அந்தஸ்து. இஸ்லாத்தின் மூன்றாவது பெரிய புனித பள்ளிவாசலான அல் அக்சா அமைந்திருக்கும் கிழக்கு ஜெரூசலேமே தங்களது எதிர்காலப் பாலஸ்தீன அரசின் தலைநகராக இருக்கவேண்டும் என்று பாலஸ்தீனர்கள் கூறுகிறார்கள். அதேவேளை யூதாயிசத்தின் புனித தலமான மேற்குச்சுவர் அமைந்திருக்கும் ஜெரூசலேம் முழுவதும் தங்களது 'ஆதி அந்தமில்லாத' தலைநகர் என்று இஸ்ரேல் கூறுகிறது.


நான்காவது காரணி அகதிகள் தங்களது சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கான உரிமை. இஸ்ரேல் அரசு பிரகடனப்படுத்தப்பட்டபோது 1948 ஆம் ஆண்டில் சுமார் ஏழு இலட்சம் பாலஸ்தீனர்கள் இடம்பெயர்ந்தார்கள். சர்வதேச சட்டத்தின்படி அவர்கள் தங்களது சொந்த இடங்களுக்கு திரும்புவதற்கு உரிமையுடையவர்கள். ஆனால் பாலஸ்தீன அகதிகள் திரும்பிவருவதற்கு அனுமதிக்கப்போவதில்லை என்று இஸ்ரேல் கூறுகிறது.

இந்த கட்டமைப்பு ரீதியான காரணகள் இரு அரசு தீர்வை களத்தில் சிக்கலாக்கியிருக்கும் அதேவேளை எந்த விட்டுக்கொடுப்பையும் செய்வதற்கு இஸ்ரேலிய வலதுசாரி தலைமைத்துவம் தயாராயில்லை. தற்போதுள்ள நிலைவரம் தொடருவதை இஸ்ரேல் விரும்புகிறது. ஆனால் இந்த நிலைவரத்தை மாற்றவேண்டும் என்று பாலஸ்தீனர்கள் விரும்புகிறார்கள்.

(த இந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பொது வேட்பாளரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியும்!



கந்தையா அருந்தவபாலன்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்துவதற்கான தமது இலக்கில் குடிமக்கள்சார் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் வேகமாக முன்னேறி வருவதுடன் மக்கள் மத்தியில் அது தொடர்பான விழிப்புணர்வும் அதற்கான ஆதரவும் பெருகிவருவது அரசியல் கட்சிகள்மீது அழுத்தத்தையும் நெருக்கடிகளையும் உருவாக்கத் தொடங்கியிருப்பதுபோல் தென்படுகிறது. இவ்வழுத்தம் தமிழ்க் கட்சிகள் மீது மட்டுமன்றி, இம்முறை தமிழ் வாக்குகளை அதிகம் எதிர்பார்த்து நிற்கும் தென்னிலங்கைக் கட்சிகள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துவது போலத் தெரிகிறது. ஆரம்பத்தில் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பாக அதிகம் அலட்டிக் கொள்ளாதிருந்த முக்கிய தமிழ் அரசியல் தலைவர்கள் இன்று தவிர்க்க முடியாதவகையில் அதற்கு எதிர்வினையாற்றுவதற்கு தள்ளப்பட்டுள்ளனர். அவர்களில் ஒரு தரப்பினரின் எதிர்வினையானது தமிழ் பொது வேட்பாளர் முன்மொழிவை வலுப்படுத்துவதாக அமைய மறுதரப்பினரின் எதிர்வினையானது அதனை வலுவிழக்கச் செய்வதற்கான திட்டமிட்ட செயற்பாடுகளாக அமைகின்றன. எடுத்துக்காட்டாக தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) போன்ற கட்சிகள் தங்களது ஆதரவை உத்தியோகபூர்வமாக வெளியிட்டிருப்பதையும், மூத்த தலைவர் சம்பந்தன் உட்பட தமிழரசுக் கட்சியின் ஒரு தரப்பினரும் டக்ளஸ் தேவானந்தா போன்றோரும் அதற்கு எதிரான செயற்பாடுகளை முடுக்கிவிட்டிருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது. இதேவேளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்கள் தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என்ற தங்களின் கோரிக்கையை வலுப்படுத்தும் ஒரு உத்தியாக தமிழ் பொது வேட்பாளர் தொடர்பாக எதிரான பரப்புரைகளைச் செய்து வருவதையும் காணமுடியும். இவ்வாறு கட்சிகள் வேறுபட்ட நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தாலும் தமது முன்மொழிவுக்கு வலுச்சேர்ப்பதற்காக பொது அமைப்புகளின் உறுப்பினர்கள் சகல கட்சித்தலைவர்களையும் சந்தித்து ஆதரவைப் பெறும் தமது நிகழ்ச்சி நிரலைத் தொடர்ந்து செயற்படுத்தி வருவதையும் அவதானிக்க முடிகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் மூலமாகச் சிறந்த அறுவடையை தமிழ் மக்கள் பெறுவதற்கு தமிழ் அரசியல் கட்சிகளின் அர்ப்பணிப்பான ஆதரவு மிக அவசியம். தேர்தல் என்று வருகிறபோது அது தொடர்பாகப் பொது அமைப்புக்களின் இயலளவு மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும். ஏனெனில் அரசியல் கட்சிகள் அதில் தேர்ச்சி பெற்றவையாக இருப்பதனாலாகும். அவற்றுள்ளும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவு மிக மிக அவசியம் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். இக்கட்சி மீதான மக்கள் ஆதரவு இறங்குமுகமாக இருந்து வந்தாலும்கூட ஒப்பீட்டு ரீதியில் மக்கள் ஆதரவு கூடிய கட்சியாகவும் தமிழர் தாயகத்தில் பரவலாக வேரூன்றிய கட்சியாகவும் இன்றுவரை அக்கட்சியே காணப்பட்டு வருகிறது. அக்கட்சி தனது முழுமையான ஆதரவை வழங்குமிடத்து பொது வேட்பாளருக்கான ஆதரவுத்தள இலக்கை இலகுவாக அடைந்து கொள்ள முடியும் என பொது அமைப்புகள் எதிர்பார்க்கின்றன. அது உண்மையுங்கூட. இதன்காரணமாக ஏலவே தமது ஆதரவைத் தெரிவித்த கட்சிகளான 'ரெலோ' 'புளொட்' போன்றனவும் தமிழரசுக்கட்சியின் ஆதரவு மிக அவசியமென்று தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. ஒருவேளை தமிழரசுக் கட்சியின் முழு ஆதரவு கிடைக்காமற்போனால் இக் கட்சிகள்கூட இப்போது ஆதரவளிக்கும் தமது முடிவை மீள்பரிசீலனை செய்யக் கூடும். எது எவ்வாறு நிகழ்ந்தாலும் குடிசார் பொது அமைப்புகள் முன்வைத்த காலை பின்வைக்கமாட்டார்கள் என்பது உறுதியாகத் தெரிகிறது. ஏனெனில் அவ்வாறு பின்வாங்குவது தமிழ்மக்களுக்கு மேலும் பாதிப்பையே தோற்றுவிக்கும் என்பது அவர்களின் கணிப்பு. அது உண்மையும் கூட. வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகள் தமிழ் பொது வேட்பாளருக்கு தமது ஆதரவைத் தராவிட்டால் அந்த முயற்சிக்கு ஏற்படும் சேதாரத்தைவிட தமிழ் அரசியல் கட்சிகளுக்கு ஏற்படும் சேதாரம் மிக மோசமாக இருக்கும் என்பதே யதார்த்தமாகும். ஏனெனில் தமிழ் அரசியல் கட்சிகள் மீதும் அவற்றின் தலைவர்கள் மீதும் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை நாளாந்தம் கரைந்து கொண்டு செல்வதனாலாகும். உண்மையில் இதன் விளைவுதான் பொது அமைப்புகள் மக்களுக்கான அரசியலை முன்னெடுக்க முனைவதும் அதற்கான மக்கள் ஆதரவு அதிகரித்துச் செல்வதுமாகும். அரசியல் கட்சிகள் மக்களுக்கான அரசியலை முன்னெடுத்து அதற்கான ஆதரவை பொது அமைப்புகளிடம் கோருவதற்குப் பதிலாக அதனை பொது அமைப்புகள் முன்னெடுத்து அதற்கான ஆதரவை அரசியல் கட்சிகளிடம் கோரும் ஒரு முரண் நிலையே இங்கு காணப்படுகிறது. இந்நிலைக்கான முழுப்பொறுப்பையும் தமிழ் அரசியல் தலைவர்களே ஏற்க வேண்டும். இந்த இடத்திலாவது தமது கடந்தகால அரசியல் செயற்பாடுகளை தலைவர்கள் மீள்பரிசீலனை செய்து தாம் விட்ட தவறுகளைத் திருத்திக் கொண்டு மக்களுக்கு சரியான வழியைக் காட்ட முன்வரவேண்டும் என்றே சமூகத்தலைவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால் மக்களின் இந்த எதிர்பார்ப்பை புரிந்துகொண்டு தமது கடந்த காலத் தவறுகளை திருத்திக்கொள்ள அரசியல் தலைவர்கள் பலர் இன்னும் தயாராக வில்லை என்பதை அவர்களின் அண்மைக் காலச் செயற்பாடுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இவர்களில் கணிசமானோர் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். 2009 இல் யுத்தம் ஓர் முடிவுக்கு வந்தபின் தமிழ்மக்களின் அரசியல் எதிர்காலத்தை நெறிப்படுத்தும் பொறுப்பு முழுக்க முழுக்க சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டது. மக்களும் நம்பிக்கையுடன் அவர்பின்னால் அணிவகுக்கத் தயாராகவே இருந்தனர். ஆனால் சம்பந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையோ, தன்பின்னால் அணிவகுத்து நின்ற மக்களையோ சரியான தடத்தில் கொண்டு செல்லத் தவறியதன் மோசமான விளைவை தமிழ் மக்கள் இன்று எதிர் நோக்கி நிற்கின்றனர். முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து சில கட்சிகளை வெளியற்றினார். பின்னர் கூட்டமைப்பையே வெளியேற்றினார். இன்று தனது கட்சியான தமிழரசுக் கட்சியை வழிநடத்தும் பொறுப்பை இலங்கை நீதிபதிகளிடம் ஒப்படைத்துள்ளார். இதை வேறு வகையில் கூறுவதானால் புலிகளால் அவரிடம் கையளிக்கட்ட கட்சியிலிருந்து முதலில் புலி நீக்கம் செய்தார். பின்னர் தமிழ்த் தேசியத்தை பௌத்த சிங்களத் தேசியத்திடம் ஈடு வைத்தார். பின்னர் ஒற்றுமையாக்கப்பட்டிருந்த ஏனைய போராளிகளின் கட்சிகளைக் கொத்திக் கலைத்தார். இன்று சமஷ்டியையும் (சமஷ்டிக்கட்சி) நீதி மன்றிடம் பாரப்படுத்தியுள்ளார். இவற்றின் மூலம் தமிழ் மக்களை நடுத் தெருவில் கொண்டு வந்து நிறுத்தியுள்ளார். இவை பற்றிய எந்த குற்ற உணர்வோ அன்றி பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாடோ இல்லாது மகனை அடுத்த நாடாளுமன்ற உறுப்பினராக்குவற்கான தனது வழமையான சுயநல அரசியல் நிகழ்ச்சி நிரலைத் தொடர்கிறார். இதற்கு சம்பந்தனை மட்டும் தனியே பொறுப்பாளியாக்க முடியாது. தலைவர் மாவை சேனாதிராசா உட்பட அக்கட்சியின் மூத்த தலைவர்கள் மட்டுமன்றி கூட்டுக்கட்சிகளின் தலைவர்களும் பொறுப்பாளிகளே.

இவ்வாறான ஒரு நிலையில் பிரிந்து போன கட்சிகளையும் சிதறிக் கிடக்கும் மக்களையும் மீண்டும் ஒரு புள்ளியில் ஒன்றிணைப்பதற்கு காலம் தந்த பொது வேட்பாளர் என்ற வாய்ப்பைக் கூடப் பயன்படுத்துவதற்கு தமிழரசுக் கட்சியில் சம்பந்தன், சுமந்திரன் உட்பட்ட ஒரு தரப்பினர் விரும்பவில்லை என்பதற்கு மேலாக அதனைக் குழப்பியடிக்கும் கைங்கரியத்திலும் தீவிரமாக ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. கடந்த அண்மிய காலத்தில் தனது மக்களுக்கெதிராக பல அட்டூழியங்களும் ஆக்கிரமிப்புகளும் நடந்தபோதும் சரி தனது கட்சியில் மோசமான குழப்பங்கள் ஏற்பட்ட போதும் சரி நோய், மூப்புக் காரணமாகக் கண்ணை மூடிப் படுத்திருந்த சம்பந்தன் ஐயா இப்போது புத்துணர்ச்சி பெற்று பொது வேட்பாளருக்கு எதிராகக் கதைப்பதான செய்திகள் அடிக்கடி வெளிவருவது மக்களுக்கு ஆச்சரியத்தை மட்டுமல்ல ஆத்திரத்தையும் தருவதாக உள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்த சுமந்திரன் பின்னர் தமிழரசுக் கட்சியின் பேச்சாளராக மாறி பின்னர் அதையும் விட்டு இப்போது சம்ந்தனின் [illegible] வல்ல அதிகாரியாக மாறியுள்ளதைச் மேற்படி செய்திகள் மூலமாக அறிய முடிகிறது.

சம்பந்தனைப் பொறுத்த மட்டில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது விசரான, விஷமான ஒன்று. அப்படியானால் வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் என்ன செய்ய வேண்டும்? அவசரப்படத் தேவையில்லை. வேட்பாளர்களின் விஞ்ஞாபனங்களைப் பார்த்து முடிவெடுக்கலாம். சரி, விஞ்ஞாபனங்களில் தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது எதுவும் கூறவில்லை என்றால் என்ன செய்வது? விஞ்ஞாபனத்தில் கூறிவதாக எடுத்துக் கொண்டால் அதை அவர் நிறைவேற்றுவதற்கான உத்தரவாதம் என்ன? தமிழ் மக்கள் வாக்களிப்பவர் வெல்வார் என்பதற்கு என்ன உத்தரவாதம்? தமிழ் மக்கள் வாக்களிக்காத வேட்பாளர் ஒருவர் வென்றால் எவ்வாறு எம்மக்களின் பிரச்சினையை அணுகுவார்? இதே போலவே முன்னைய காலங்களில உங்களை நம்பி நீங்கள் கைகாட்டியவருக்கு வாக்களித்த உங்கள் மக்ளுக்கு நீங்கள் பெற்றுக் கொடுத்தது என்ன? இக்கேள்விகளுக்கு சம்பந்தனிடமோ அல்லது மற்றவர்களிடமோ பதிலில்லை.

தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வு சிங்களத் தலைவர்களுடான பேச்சு வார்த்தைகள் மூலமே எட்டப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக் கிடையாது. அதேவேளை வெளி அழுத்தங்கள் எதுவும் இல்லாது தென்னிலங்கைத் தரப்பு எள்ளளவும் அசையாது என்பதும் வெளிப்படையானது. வெளியிலிருந்தான அழுத்தங்களுடன் தென்னிலங்கையுடனான பயனுள்ள பேச்சுவார்த்தைக்கு தமிழ்த் தரப்பு ஒற்றுமையாகவும் பலமாகவும் இருக்க வேண்டியது மிகமிக அவசியமானது. அதேவேளை எதிர்காலத்தில் எல்லாத் தரப்பினரின் ஆதரவும் தேவைப்படும் என்பதால் எந்த வேட்பாளரையும் பகைக்கவோ வெறுக்கவோ வேண்டியதில்லை. இவை எல்லாவற்றுக்கும் இன்றைய களநிலையில் மிகப் பொருத்தமான ஒரு தீர்வாகவே பொது வேட்பாளர் என்பது தென்படுகிறது.

தமிழரசுக் கட்சியில் பொது வேட்பாளரை ஆதரிக்கும் மறுதரப்பினரின் முடிவு எதிர் காலத்தில் எப்படி இருக்கும்? தமது ஆதரவாளர்களை பொது வேட்பாளரை ஆதரியுங்கள் என்று கூறும் தைரியம் அவர்களிடம் இருக்காது என்பதற்கு அப்பால் கட்சியின் முடிவே அவர்களது முடிவாகவும் அமையும். கட்சியின் முடிவு என்பது சம்பந்தன் சுமந்திரனின் முடிவாகவே இருக்கும் என்பதைத் தமிழரசுக் கட்சியின் கடந்த செயற்குழுக் கூட்டம் புலப்படுத்தியது. அக்கட்சியின் தற்போதைய தலைவர் நாணயத்தின் எந்தப் பக்கம் விழுந்தாலும் அதற்குச் சரியெனத் தலையாட்டிவிட்டு அமைதியாகி விடுவார். " உங்களுக்கு உதவி செய்ய எனக்கு விருப்பந்தான். மனுஷிக்கு-அவருக்கு விருப்பமில்லை நான் என்ன செய்யிறது" என்ற ஊர்க்கதைப் பாணியில் இவர்களும் திருப்திப் பட்டுக் கொள்வார்கள். அதற்கிடையில் ஓரிருவர் கட்சியின் சார்பில் தாம் விரும்பும் யாராவது ஒரு வேட்பாளருடன் தமிழ் மக்களுக்கான தேவை குறித்து பேரம் பேசுவார்களோ இல்லையோ ஆனால் தமது தேவைகளுக்கான பேரம்பேசுதல்களை கனகச்சிதமாக நிறைவேற்றி விடுவர். முடிவு பழைய குருடி கதவைத் திறவடி என்பதாக இருக்குமா? எதிர்காலத்தில் மக்கள் அதற்கு இடம் கொடுக்க மாட்டார்கள் போலத் தெரிகிறது.



தமிழ் அரசு கட்சியில் ஓரிருவர் கட்சியின் சார்பில் தாம் விரும்பும் யாராவது ஒரு வேட்பாளருடன் தமிழ் மக்களுக்கான தேவை குறித்து பேரம் பேசுவார்களோ இல்லையோ ஆனால் தமது தேவைகளுக்கான பேரம்பேசுதல்களை கனகச்சிதமாக நிறைவேற்றி விடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பொதுவேட்பாளர்: தமிழ் மக்கள் பொதுச் சபையின் அறிக்கை

குடிமக்கள் சமூகக் கூட்டிணைவின் 30.04.2024 வவுனியாத் தீர்மானத்தின் தொடர்ச்சியாக இரண்டாவது பொதுச்சபைக் கூட்டம் 05.06.2024 புதன்கிழமை அன்று யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

அதில், இதுவரை வடக்கு கிழக்கு சிவில் அமைப்புக்களின் கூட்டிணைவு என்று அழைக்கப்பட்ட தமிழ் குடி மக்கள் சமூகத்தின் கட்டமைப்பை இனிமேல், "தமிழ் மக்கள் பொதுச்சபை" என அழைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தில் அரசியல் கட்சிகள் தங்கள் முடிவுகளை உத்தியோகபூர்வமாக அறிவித்து முடித்தவுடன் பரஸ்பர புரிந்துணர்வு அடிப்படையில் ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்கி செயற்படுவது என ஏகமனதாக முடிவெடுக் கப்பட்டது.

அத்துடன் தமிழ் மக்கள் பொதுச்சபைக்கான ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட வழிகாட்டல் குழுவும் இருபத்தி ஐந்து பேரை உள்ளடக்கிய தலைமை ஒருங்கிணைப்புக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. தலைமை ஒருங்கிணைப்புக் குழுவில் இருந்து தமிழ் மக்கள் சபைக்குரிய செயற்குழுக்கள் தெரிவுசெய்யப்படும் என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதத்தின் இறுதி சனிக்கிழமைகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழ் மக்கள் பொதுச்சபை கூடி தேவையான முடிவுகளை எடுக்கும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பங்கேற்ற அமைப்புக்கள் மற்றும் செயற்பாட்டாளர்களின் ஒப்பம்

1. சமூக அபிவிருத்தி அமைப்பு - மட்டக்களப்பு
2. நல்லோர் உலகை கட்டி எழுப்பும் அமைப்பு - மட்டக்களப்பு
3. இளைஞர் அமைப்பு மட்டக்களப்பு
4. மீன்பிடி சங்கம் திருப்பெருந்துறை - மட்டக்களப்பு
5. கிழக்கு பல்கலைகழக தமிழ் மாணவர் ஒன்றியம்
6. யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
7. தமிழ் இளையோர் மக்கள் இயக்கம்
8. பண்ணையாளர் சங்கம்
9. "சன்ரைஸ்" அமைப்பு
10. குரலற்றவர்களின் குரல் அமைப்பு
11. வடக்கு கிழக்கு வலிந்து காணமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம்
12. "மக்கள் மனு" வடக்கு கிழக்கு சிவில் சமூகம்
13. தமிழர் கலை பண்பாடு மையம்
14. சமூக விஞ்ஞான ஆய்வு மையம்
15. "எம்பவர்" நிறுவனம் - திருகோணமலை
16. தமிழ் சிவில் சமூக அமையம்
17. தளம் அமைப்பு - திருகோணமலை
18. போராளிகள் நலன்புரிச்சங்கம்
19. ஒருங்கிணைந்த தமிழர் கூட்டமைப்பு
20. கால்நடை சமாசம் - மட்டக்களப்பு
21. வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கம்
22. க.இராசலிங்கம் - வாகரை சிவில் சமூக செயற்பாட்டாளர்
23. தவத்திரு அகத்தியர் அடிகள்- தென்கைலை ஆதீனம் - திருகோணமலை
24. சி.அ.யோதிலிங்கம் - சமூக விஞ்ஞான ஆய்வுமையம்
25. அருட்திரு.ப.யோ.ஜெபரட்ணம்- குருமுதல்வர் யாழ் மறைமாவட்டம்
26. கி.ஜெயக்குமார் - மறைக்கோட்ட முதல்வர் இளவாலை
27. சி.மதன்பாபு - இணையம் அமைப்பு
28. இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளனம்
29. சே.ஞானமலர் - இரணைமடு டி-8 கமக்கார அமைப்பு
30. யாழ் வணிகர் கழகம்
31. ந.பரந்தாமன் - பேராசிரியர் துரைராஜா அறிவியல் வளர்ச்சிப் பேரவை
32. சி.சயந்தன் - பேராசிரியர் துரைராஜா அறிவியல் வளர்ச்சிப் பேரவை
33. வி.குயிலன் - பேராசிரியர் துரைராஜா அறிவியல் வளர்ச்சிப் பேரவை
34. ஏ.பெனடிக்ட் குருஸ் - நப்சோ அமைப்பு மன்னார்
35. எஸ். மகாலிங்கம் - இணைச்செயலாளர் தனியார் பேருந்து (788)
36. ஆ.மோகன் பிரசாந் - பேராசிரியர் துரைராஜா அறிவியல் வளர்ச்சிப் பேரவை
37. த.சிறி - சமூக செயற்பாட்டாளர்
38. தம்பாட்டி கிராமிய கடன் நலன்புரிச்சங்கம்
39. எம்.கம்சன் - சமூக செயற்பாட்டாளர்
40. இரணைமடு கமக்கார அமைப்பு
41. கி.ஆறுமுகம்- சமூக செயற்பாட்டாளர்
42. வணபிதா.சதீஸ்டானியல் தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனம்
43. வேலன்சுவாமிகள் -"ீ மக்கள் பேரெழுச்சி இயக்கம்
44. பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம் - அரசறிவியல் துறை தலைவர் - யாழ் பல்கலைக்கழகம்
45. அருட்தந்தை பிரான்சிஸ் யூட் ஞானராஜ்
46. அ.அன்னராசா - அகில இலங்கை மீனவ அமைப்பு
47. அ.யதீந்திரா - மக்கள் மனு வடக்கு கிழக்கு சிவில் சமூகம்
48. ச.இளங்கோ - சமூக சமுர்த்தி நல்லூர் பிரதேச மட்டத்தலைவர்
49. அகரம் மக்கள் மையம் - திருகோணமலை
50. சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கம் - யாழ்ப்பாணம்
51. யாழ் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் - யாழ்ப்பாணம்
52. கால்நடை கூட்டுறவுச் சங்கம் - யாழ்ப்பாணம்
53. பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம் - யாழ்ப்பாணம்
54. கிராமிய வங்கி நுகர்ச்சி கூட்டுறவு சங்கம் - யாழ்ப்பாணம்
55. விவசாய சங்க கூட்டுறவுச் சங்கம் - யாழ்ப்பாணம்
56. யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
57. ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு
58. வடமாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கம்
59. அகில இலங்கை மீனவ மக்கள் பொதுச்சங்கம்
60. அனலைதீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
61. ஊர்காவற்துறை கடற்தொழிலாளர் நலன்புரிச் சங்கம்
62. மெலிஞ்சிமுனை கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
63. எழுவைதீவு கிராம அபிவிருத்திச் சங்கம்
64. நாரந்தனை வடக்கு சனசமூக நிலையம்
65. வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சமாசம்
66. புங்குடுதீவு நசரத் கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கம்
67. தம்பாட்டி நலன்புரிச் சங்கம்
68. ஜே98 சிவில் சமூக குழு
69. சி.பூஜா - சமூக செயற்பட்டாளர் மட்டக்களப்பு
70. ம.செல்வின் - சமூக செயற்பட்டாளர்
71. செ.கிரிசாந் - ஊடகவியலாளர்
72. இ.பாரதி - ஊடகவியலாளர்
73. மட்டக்களப்பு சிவில் சமூகம் - வணபிதா.ம.லூக்யோன்
74. சிவசிஸ்ரீ.வீ.கே. சிபாலன்குருக்கள்
75. ம.நிலாந்தன் - சமூக செயற்பாட்டாளர்
76. விஜயகுமார் - யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர்
77. உதயராஜ் - யாழ் மாவட்ட தனியார் பேருந்து இணையம்
78. காரைநகர் தனியார் பேருந்து சங்கம்
79. யாழ்மாவட்ட பாரதி ஊர்திகள் சங்கம்
80. இந்திரன் ரவீந்திரன் - சமூக செயற்பாட்டாளர்
81. கால்நடை பண்ணையாளர் அமைப்பு - மயிலத்தமடு மாதவனை
82. தமிழ் ஊடகத் திரட்சி (நிமிர்வு)
83. அருட்பணி லூக் ஜோன் - மட்டக்களப்பு சிவில் சமூகம்

---



# வியுக்தியார் பதில்கள்

உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

**எஸ், கிருஷாந்த்,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** : தமிழ், முஸ்லிம் மக்களில் பெரும்பாலானவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்குவார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் அகிலவிராஜ் காரியவசம் கூறுகிறார். தமிழ் மக்களின் வாக்குகள் சஜித் பிரேமதாசாவுக்குத்தான் என்று அவரின் கட்சியினர் கூறுகின்றனர். வியுக்தியாரே யாருக்கு ஆதரவு வழங்குவார்கள் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?

**வியுக்தியார்:** அது வேறு ஒன்றுமில்லை, சஜித்தைச் சந்திக்கின்ற நமது தலைவர்கள், உங்களுக்குத்தான் எமது மக்கள் போடுவார்கள் என்கின்றனர். அதே தலைவர்கள் பின்னர் ரணிலை சந்திக்கின்றபோதும் உங்களுக்குத்தான் எங்கள் மக்கள் போடுவார்கள் என்று தான் சொல்கின்றனர். இருவரையும் ஒன்றாக வைத்துக்கொண்டு அவர்கள் சொல்லுவதில்லைத்தானே?. ஆனால் இவர்கள் தமிழ் பொதுவேட்பாளர் பற்றி சொல்கின்றபோது மட்டும் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்று சொல்கிறார்கள். அதாவது தமிழ் மக்கள் சிங்கள வேட்பாளருக்குத் தான் போடுவார்கள் தமிழ் வேட்பாளருக்கு அல்ல என்கின்றனர். அதுதான் ஒன்றும் புரியவில்லை.

**த. பிரதீபன்,**
**சின்ன உப்போடை, மட்டக்களப்பு**

**கேள்வி:** ஜனாதிபதி தேர்தலுக்காக ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வருவதாகத் தெரிகின்றது. அண்மையில் தேர்தலுக்கான பிரச்சார அலுவலகத்தை ஜனாதிபதி ரணில் திறந்துவைத்திருக்கிறார். கட்சியின் முக்கிய பதவிகளுக்கு ஆட்கள் நியமிக்கப்படுகின்றார்கள். ஆனால் இன்னமும் ஜனாதிபதி ரணில், தான் போட்டியிடப்போவதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லையே ஏன்?

**வியுக்தியார்:** அது வேறு ஒன்றுமில்லை. அவர் உத்தியோகபூர்வமாக அறிவித்துவிட்டால், அரச செலவில் தற்போது நடக்கும் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை செய்யமுடியாமல் போய்விடுமே. அரச காணிகளை மக்களுக்கு வழங்குகிறார், அரிசி கொடுக்கிறார். நிவாரணங்கள் கொடுக்கிறார். இவை எல்லாம் அரச செலவில் தனக்கு வாக்கு சேகரிக்கும் முயற்சிதானே. தேர்தலில் தான் போட்டியிடப்போவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துவிட்டால், இவற்றையெல்லாம் செய்வது தார்மீக ரீதியில் தவறாகிவிடும் என்று நினைக்கிறாரோ தெரியவில்லை.

**கே. கோகுலன்,**
**கரவெட்டி கிழக்கு, கரவெட்டி**

**கேள்வி:** தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவுக்கு பலம் வாய்ந்த அமைச்சுப் பதவியை வழங்குவதற்கான கலந்துரையாடல் இடம்பெற்று வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளனவே. அவர் போன்ற ஒரு இனவாதிக்கு ஜனாதிபதி ரணில் அமைச்சுப்பதவியை வழங்குவார் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:** ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தாங்கள் கருதுவதுபோல ஒரு இனவாதி அல்ல என்றுதான் நானும் நினைக்கின்றேன். ஆனால் தேர்தல் என்று வந்துவிட்டால் அனைத்து தரப்பினரதும் வாக்குகளையும் பெற்றால் மட்டுமே வெற்றிபெறமுடியும். அதுகும், நமது நாட்டில் தெற்கு வாக்காளர்களில் கணிசமானவர்கள் சிங்கள பௌத்த இனவாதிகள் என்பது நமக்கெல்லாம் தெரிந்ததுதான். அவர்களின் வாக்குகளும் கிடைத்தால் தான் வெற்றிபெறமுடியும் என்பதை பழுத்த அனுபவசாலியான ரணில் அறியாதவர் இல்லையே. அந்த வாக்குகளை குறிவைக்க விமல்வீரவன்ச போன்ற ஒருவர் அவருக்கு தேவை என்று நினைக்கிறார் என்றுதான் தெரிகின்றது.

**க.சுகிர்தகுமார்,**
**பூவரசங்குளம், வவுனியா**

**கேள்வி:** உங்கள் ஈழநாடு- டான் ரிவி குழுமத்தின் தலைவர் குகநாதன், தேசியக் கட்சி ஒன்றில் உறுப்பினராக இருக்கிறார் என்று சிலர் கூறுகிறார்களே. அவர் எந்தக் கட்சியில் இருக்கிறார் என்று கேட்டுச் சொல்வீர்களா?

**வியுக்தியார்:** அவர் அரச புலனாய்வாளர்களுடன் சேர்ந்து பணியாற்றியவர் என்று முன்னர் சொன்னார்கள். அதிகம் ஏன் டான் ரிவியே கோட்டாபயவினுடையது தான் என்று கூட எழுதினார்கள். அவர் அது எதனையுமே கண்டுகொள்ளவில்லை. அவர் தனது ஊடகங்களை நிர்வகிப்பதற்கே நேரம்போதாமல் தடுமாறிக்கொண்டிருக்கிறார், இந்த லட்சணத்தில் புலனாய்வாளர்களுடன் பணியாற்ற அவருக்கு நேரம் கிடைக்கும் என்று நான் நினைக்கவில்லை. அவருக்கு புலனாய்வு அதிகாரிகளுடன் அறிமுகம் இருக்கலாம். நமது அரசியல் 'தலைவர்களில்' அரைவாசிக்கும் அதிகமானவர்கள் அவர்களுடன் சேர்ந்து இயங்கியவர்கள்தானே. இனி நீங்கள் கேட்ட கேள்விக்கு வருகின்றேன். அவர் ஈழநாடு பத்திரிகையின் ஆசிரிய பகுதியில் பணியில் சேருவதற்கு முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினராக இருந்தவர்தான். ஆனால் அதற்கு பின்னர் அவர் எந்த அரசியல் கட்சியிலும் உறுப்பினராக இருக்கவில்லை. அப்படி யாரும் சொன்னால், அதனை யாராவது நிருபிக்க முடியுமா என்கிறார். அப்படி இருந்தாலும் அதில் என்னவாம். ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்துகொண்டே, தமிழ் அரசு எம்.பி.யாகவும் இருந்த ஒருவருக்கு நெருக்கமானவர்கள்தான், இப்போது குகநாதன் தேசியக்கட்சியில் இருப்பதாகவும் கதைக்கிறார்கள் என்பதையும் நீங்கள் கவனிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதிக்கான நோபல் பரிசு வென்ற விஞ்ஞானி: மெக்சிகோ 200 ஆண்டு வரலாற்றில் முதல் பெண் அதிபர்:

ஐங்கரன் விக்கினேஸ்வரா

உலகின் பல நாடுகளில் பெண் அரசியல்வாதிகள் தலைமைப் பொறுப்பில் அதிபர்களாகவும், பிரதமர்களாகவும் தற்போது உள்ளனர். இவ்வகையில் தற்போது மெக்சிகோவின் முதல் பெண் அதிபராக கிளாடியா ஷீன்பாம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மெக்சிகோவின் முதல் பெண் அதிபராக தெரிவு செய்யப்பட்டுள்ளமை போன்று, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் பல பெண் ஆளுமைகள் ஆட்சியில் உள்ளனர். அத்துடன் இலத்தீன் அமெரிக்காவில் உள்ள 12க்கும் அதிகமான நாடுகளில் ஜனநாயக தேர்தல் முறை மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட இடதுசாரி அரசாங்கங்கள் தற்போது ஆட்சிப் பொறுப்பில் உள்ளன.

எதற்காக இலத்தீன் அமெரிக்க நாடுகள் இடதுசாரி பாதையில் தொடர்ந்து முன்னேறுகின்றன என்பது அமெரிக்காவிற்கு வியப்பாக இருப்பினும், மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட அரசுகள் இவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

**இலத்தீன் அமெரிக்காவில் இடதுசாரி அரசு எழுச்சி:**

இலத்தீன் அமெரிக்க நாடுகளில் இடதுசாரி அரசுகளின் எழுச்சியாக 2018 இல் மெக்-ஸிக்கோவும், பின்னர் 2019 இல் அர்ஜென்டீனாவும் எழுந்தன. மேலும் 2020 இல் பொலிவியாவில் இடதுசாரி அரசு நிறுவப்பட்டது.






அதன்பின் 2021 இல் பெரு, ஹொண்டுராஸ் சிலி, பின்னர் கொலம்பியாவை தொடர்ந்து 2022 இல் பிரேஸிலில் இடதுசாரி அரசை அந்நாட்டு மக்கள் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுத்துள்ளனர். குவாத்தமாலா ஜனாதிபதித் தேர்தலில் பெர்னார்டோ அரேவலோ மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளார்.

**அமைதிக்கான நோபல் பரிசு வென்றவர்:**

சர்வதேச ரீதியில் மகளிர் சக்தி பல துறைகளில் பரவி வருகின்ற நிலையில் அரசியல் களத்திலும் அவர்களுடைய சாதனைகளையும் அவர்கள் சமூகத்தின் மீது ஏற்படுத்துகின்ற தாக்கத்தையும் உணர முடிகிறது.

அமைதிக்கான நோபல் பரிசு வென்ற விஞ்ஞானியாகவும், அரசு ஊழியராகவும், நீண்டகால சமூக செயற்பாட்டாளராகவும் செயல்பட்ட 'கிளாடியா ஷீன்பாம்' மெக்சிகோவின் 200 ஆண்டு கால தேர்தல் வரலாற்றில் முதல் பெண் ஜனாதிபதியாவார்.

கடந்த ஜூன் 3 - ஜூன் 2ம் தேதி நடைபெற்ற மெக்சிகோ ஜனாதிபதி தேர்தல் முடிவில் டாக்டர். கிளாடியா ஷீன்பாம் ஜனாதிபதியாக வெற்றி பெற்றுள்ளார்.

மெக்சிகோவின் தேசிய மறுமலர்ச்சிக்கான இயக்கம், மெக்சிகோ பசுமை சூழலியல் கட்சி மற்றும் தொழிலாளர் கட்சி ஆகியவற்றுடன் கூட்டணி அமைத்து செயல்பட்டு வந்த இவர் 58 சதவீத வாக்குகள் பெற்று வென்றுள்ளார்.

**200 ஆண்டில் முதல் பெண் அதிபர்:**

மெக்சிகோ நாட்டின் 200 ஆண்டுகளில் முதல் முறையாக பெண் அதிபராக கிளாடியா ஷீன்பாம் வரலாற்று சிறப்புமிக்க தேர்தலில் வெற்றிபெற்று தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார்.

கடந்த வாரம் ஜூன் 2,3ம் திகதிகளில் நடைபெற்ற தேர்தலில் மெக்சிகோ நகரின் 61 வயதான முன்னாள் மேயர் 58ூ முதல் 60ூ வரை வாக்குகளைப் பெற்றதாக ஆரம்ப முடிவுகள் காட்டுவதாக மெக்சிகோவின் அதிகாரப்பூர்வ தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

இது அவரது முக்கிய போட்டியாளரான தொழிலதிபரான ஹோட்சில் கல்வேஷ் ஐ விட சுமார் 30 சதவீதத்தால் முன்னிலையில் பெற்றார்.

அவர் எதிர் வரும் அக்டோபர் 1 ஆம் திகதி தனது வழிகாட்டியான தற்போதைய அதிபரான ஆண்ட்ரேஸ் மானுவல் லோபஸ் ஒப்ராடரை வெளியேறும் போது அந்த இடத்தைப் பொறுப்பேற்பார்.


கிளாடியா ஷீன்பாம் அடிப்படையில் இவர் ஒரு யூதர். இவரது தாய்வழி தாத்தாவும் பாட்டியும் பல்கேரியாவிலிருந்து நாஜிகளிடமிருந்து தப்பி மெக்சிகோவிற்கு குடிபெயர்ந்தவர்கள். அவரது தந்தை வழி அப்பப்பாவும், அப்பம்மாவும் லிது வேனியாவைச் சேர்ந்தவர்கள்.

**முதல் பெண் அதிபர் ஓர் விஞ்ஞானி:**

அரசியலில் ஈடுபடுவதற்கு முன்பு ஒரு விஞ்ஞானியாக ஒரு சிறந்த வாழ்க்கையை கொண்டிருந்தார். அவரது பெற்றோர் இருவரும் விஞ்ஞானிகள் ஆவார்கள். அத்து டன் திருமதி ஷீன்பாம் ஆற்றல் பொறியியலில் முனைவர் பட்டம் பெறுவதற்கு முன்பு இயற்பியல் படித்தார்.

தற்போது அவர் மேற்கு நாடுகளின் உறவுகளை வளர்ப்பேன் என்று உறுதியளித்துள்ளார். இந்த வெற்றி தனக்கு மட்டு மின்றி அனைத்து பெண்களுக்குமான சாதனை என்றார் கிளாடியா ஷீன்பாம்.

கிளாடியா ஷீன்பாம் வெற்றியை ஒப்புக்கொண்ட தனது போட்டியாளரான ஹோட்சில் கல்வேஷ்க்கும் நன்றி தெரிவித்தார்.







ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவதற்கு முன்னர் ஷீன்பாம் மெக்சிகோ நகரத்தின் மேயராக இருந்தார். இது நாட்டின் மிகவும் செல்வாக்கு மிக்க அரசியல் பதவிகளில் ஒன்றாகும் மற்றும் ஜனாதிபதி பதவிக்கு வழி வகுத்ததாகக் கருதப்படுகிறது.

அவர் கலிபோர்னியாவில் உள்ள ஒரு புகழ்பெற்ற ஆராய்ச்சி ஆய்வகத்தில் மெக்சிகன் ஆற்றல் நுகர்வு முறைகளைப் படித்து, காலநிலை மாற்றத்தில் நிபுணரானார்.

அந்த அனுபவமும் அவரது மாணவர் செயல்பாடும் இறுதியில் ஆண்ட்ரேஸ் மானுவல் லோபஸ் ஒப்ராடோர் தலைநகரின் மேயராக இருந்த நேரத்தில் மெக்சிகோ



நகரத்திற்கான சுற்றுச்சூழலுக்கான செயலாளராக பதவியைப் பெற்றார்.

2018 ஆம் ஆண்டில் அவர் மெக்சிகோ நகரத்தின் முதல் பெண் மேயரானார் 2023 ஆம் ஆண்டு வரை அவர் பதவி வகித்தார். அவர் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட மேயர் பதவிலிருந்து விலகினார்.

மெக்சிகோ தேர்தலில் இரண்டு முன்னணிப் போட்டியாளர்கள் பெண்கள் என்பது பரவலாகக் கொண்டாடப்பட்டாலும், பிரச்சாரம் வன்முறைத் தாக்குதல்களால் சிதைக்கப்பட்டது.

ஒரு புதிய ஜனாதிபதியுடன், வாக்காளர்கள் மெக்சிகோவின் காங்கிரஸின் அனைத்து உறுப்பினர்களையும் எட்டு மாநிலங்களின் ஆளுநர்களையும், மெக்சிகோ நகர அரசாங்கத்தின் தலைவர் மற்றும் ஆயிரக்கணக்கான உள்ளூர் அதிகாரிகளையும் தேர்ந்தெடுத்தனர்.

குறிப்பாக உள்ளூர் வேட்பாளர்கள் வாக்கெடுப்புக்கு முன்னதாக குறிவைக்கப்பட்டனர். மெக்சிகோ தேர்தல் காலத்தில் நாடு முழுவதும் 20 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக அரசாங்கம் கூறுகிறது. மற்ற ஆய்வுகள் மொத்தம் 37 பேர் என்று கூறுகின்றன.

**வன்முறைகளை எவ்வாறு சமாளிப்பார் ?**

மெக்சிகோவின் வன்முறைக் கும்பல்களை எவ்வாறு சமாளிப்பது என்பது திருமதி ஷீன்பாம் பதவியேற்கும் போது எதிர்கொள்ளும் பல சவால்களில் ஒன்றாக இருக்கும்.

வன்முறையின் வேர்கள் என்று அவர் கூறுவதைச் சமாளிப்பது முக்கியம் என்றும், ஏழை இளம் மெக்சிகன்கள் குற்றக் குழுக்களால் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதைத் தடுக்க நலத் திட்டங்களில் முதலீடு செய்வதாகவும் உறுதியளித்துள்ளார்.

மெக்சிகோவின் வடக்கே, அயல் நாடான அமெரிக்காவுடனான நட்பு, பரஸ்பர மரியாதை மற்றும் சமத்துவம் ஆகியவற்றின் உறவு இருப்பதை உறுதி செய்வதாக அவர் கூறினார்.

ஆனால் அமெரிக்காவில் வசிக்கும் மற்றும் பணிபுரியும் பல மெக்சிகன்களைப் பற்றிய குறிப்பில், எல்லையின் மறுபக்கத்தில் இருக்கும் மெக்சிகன்களை எப்போதும் பாதுகாப்பதாக உறுதியளித்தார்.

2018 முதல் ஆட்சியில் இருக்கும் லோபஸ் ஒப்ராடரின் கீழ் அமெரிக்காவிற்கும் மெக்சிகோவிற்கும் இடையிலான உறவுகள் பாதிக்கப்பட்டன.

மெக்சிகோவின் அரசியலமைப்பின் கீழ் வெளிப்படையாகப் பேசும் தற்போதைய அதிபர் இரண்டாவது முறையாக போட்டியிட தடை விதிக்கப்பட்டார் இது ஜனாதிபதிகளை ஒரு ஆறு வருட காலத்திற்கு மட்டுமே கட்டுப்படுத்துகிறது. அவர் தனது ஷீன்பாமின் ஆதரித்தார்.

அவருக்கு வாக்களித்தவர்களில் பலர், வறுமையை ஒழிப்பதற்கான மொரேனாவின் திட்டத்தை ஆதரிப்பதாகவும், அது தொடர விரும்புவதாகவும் கூறினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு தொழிலாளர்களின் பண அனுப்பல்கள் அதிகரிப்பு!

கொழும்பு, ஜுன் 09

**இலங்கைக்கு இந்த வருடம் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் பண அனுப்பல்கள் 475. 7 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது 11. 8 சதவீத வளர்ச்சியாகும் என்றும் தெரிவித்துள்ளது.**

மத்திய வங்கி அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இந்த வருடத்தின் கடந்த மே மாதம் வரையிலான பண அனுப்பல்கள் 2, 624. 4 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த 2023 ஆண்டு இதே காலப்பகுதியுடன் (ஜனவரி - மே) ஒப்பிடும் போது இது 11. 8 சதவீத வளர்ச்சியாகும் என்றும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

(எ)

## 4 வயது மகன்மீது சித்திரவதை! தாயும் அவரது காதலனும் கைது

கொழும்பு, ஜுன் 09

4 வயது மகனைத் தாக்கி சித்திரவதை செய்ததாகக் கூறப்படும் தாயும் அவரது காதலனும் கைது செய்யப்பட்டதாக வெலிகமை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிகமை பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயது தாயும் 40 வயதுடைய தாயின் காதலனும் 4 வயது மகனைத் தாக்கி கயிற்றினால் கட்டி சித்திரவதை செய்வதாக 6 ஆம் திகதி இரவு பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டதுடன், சித்திரவதைக்குள்ளான சிறுவன் வெலிகமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

சித்திரவதைக்குள்ளான மகன் மின்சார கம்பிகளைச் சேதப்படுத்தியதால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக விசாரணையில் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட தாயையும் தாயின் காதலனையும் மாத்தறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(எ)

## தங்க வேட்டையில் ஈடுபட்ட 4 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உடன் இடமாற்றம்

புத்தளம், ஜுன் 09

வீடொன்றில் தங்கத்தை தேடி அகழ்வுப் பணியில் ஈடுபட்ட புத்தளம் பிரதான பொலிஸ் பரிசோதகர் உட்பட நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

புத்தளம் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தின் கீழ் உள்ள குற்ற விசாரணைப் பிரிவில் கடமையாற்றிய அந்தப் பிரிவின் பொறுப்பதிகாரி உட்பட நால்வரே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று புத்தளம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா தெரிவித்தார்.

ஸ்கானர் இயந்திரம் ஒன்றைப் பயன்படுத்தி புத்தளம் - ஆனமடுவ பகுதியில் உள்ள வீடொன்றில் தங்கத்தை தேடி அகழ்வுப் பணியில் ஈடுபட்டனர் என்று இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

(எ)

## பஸ் சாரதி மற்றும் நடத்துநர் போதைப்பொருளுடன் கைது

பெரிய நீலாவணை, ஜுன் 09

ஐஸ் போதைப்பொருளை நீண்ட காலமாக பயன்படுத்தி, விநியோகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் பஸ் சாரதி மற்றும் நடத்துநரை பெரிய நீலாவணை பொலிஸார் கைது செய்தனர்.

அம்பாறை - பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு தாளவட்டுவான் சந்தி அருகில் நேற்று முன்தினம் இரவு சந்தேகத்துக்கிடமாக இருவர் நடமாடுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய அங்கு சென்ற பொலிஸார் குறித்த இருவரையும் சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது, தனியார் பஸ் சாரதி மற்றும் நடத்துநர் என அடையாளம் காணப்பட்ட இவ்விரு சந்தேக நபர்கள் வசமிருந்து ஐஸ் போதைப்பொருட்கள் மீட்கப்பட்டன.

குறித்த இரு சந்தேக நபர்களிடம் இருந்து 3,300 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன் இரு சந்தேக நபர்களும் மத்திய முகாம் பகுதியைச் சேர்ந்தவர்களாவர் என்றும் பொலிஸார் கூறினர்.

32 மற்றும் 37 வயது மதிக்கத்தக்க இரு சந்தேக நபர்களிடமும் மேலதிக விசாரணைகளை பெரிய நீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜே. எஸ். கே. வீரசிங்க தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டதுடன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# இலங்கை முன்னென்றும்...

(08ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கும் அதேவேளை மறுபுறத்தில் ஐக்கிய தேசிய கட்சி அரசியல்வாதிகள் தேர்தலுக்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கிறார்கள்.

உண்மையிலேயே ஐக்கிய தேசிய கட்சி மக்கள் மத்தியிலான ஆதரவையும் கட்சி ஒழுங்கமைப்புகளையும் பொறுத்தவரை மிகவும் பலவீனமான நிலையில் இருப்பதே அதன் அரசியல்வாதிகளின் குழப்பகரமான கருத்துக்களுக்கு பிரதான காரணமாகும். ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்ற ஜனாதிபதியின் அறிவிப்பு தனது தலைமையின் கீழ் மூன்று தசாப்தங்களாக இருந்துவரும் கட்சியின் இன்றைய நிலை பற்றிய அவரின் தெளிவான புரிதலை பிரகாசமாக வெளிக்காட்டியது.

தற்போதைக்கு தனது கட்சியை மீளக்கட்டியெழுப்ப முடியாது என்று நன்றாக உணர்ந்துகொண்டதன் காரணத்தினாலேயே பல்வேறு கட்சிகளை உள்ளடக்கிய பரந்தளவிலான கூட்டணி ஒன்றின் சார்பிலான சுயாதீன வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதே புத்திசாலித்தனமானது என்ற முடிவுக்கு விக்கிரமசிங்க வந்தார்.

ஆனால், அந்த பரந்தளவிலான கூட்டணியை அமைப்பதற்கான அவரின் முயற்சிகள் இதுவரையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை காணவில்லை. பலதரப்பினரதும் ஆதரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது குறித்து உத்தியோகபூர்வமாக இதுவரையில் அறிவிக்கவில்லை. கடந்த வாரம் கொழும்பில் தனது அரசியல் அலுவலகத்தை திறந்துவைத்த வேளையிலும் கூட அவரிடமிருந்து அந்த அறிவிப்பு வரவில்லை.

பொருளாதார நிலைவரத்தில் ஏற்பட்டு வருகின்ற மேம்பாடு காரணமாக நாட்டு மக்கள் மத்தியில் தனக்கு கணிசமான ஆதரவு வளர்ந்திருப்பதாக ஜனாதிபதி நம்புகிறார். அவரது பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் பயனாக பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை என்பது உண்மை. ஆனால் கிடைக்கக்கூடியதாக இருக்கும் பொருட்களை வாங்கக்கூடிய வசதிபடைத்த சமூகப் பிரிவினர் விக்கிரமசிங்க தொடர்ந்தும் பதவியில் இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நாட்டுமக்களில் அதிகப் பெரும்பான்மையானவர்களினால் பெரும்பாலான பொருட்களை வாங்குவதற்கு பணம் இல்லை.

பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி எடுத்துவரும் நடவடிக்கைகளுக்காக மாத்திரம் அடுத்த தேர்தலில் நாட்டு மக்கள் அவருக்கு அமோகமான ஆதரவை வழங்கி மீண்டும் ஜனாதிபதியாக்கிவிடுவார்கள் என்று கூறமுடியாது. தேர்தல்கள் என்று வரும்போது அதில் கட்சி அரசியல், வாக்கு வங்கி போன்ற பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துவது வழமை.

அவரது கட்சி தொடர்ந்தும் பலவீனமானதாக இருப்பதே பரந்தளவிலான கூட்டணியை அமைப்பதற்கான அவரது முயற்சிகள் பெருமளவுக்கு வெற்றிபெற முடியாமல் இருப்பதற்கு காரணமாகும். அவரை ஆதரிக்க முன்வரக்கூடிய வேறு கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள் தங்களது எதிர்கால பாராளுமன்ற வாய்ப்புக்களையும் மனதில் கொண்டுதான் வியூகங்களை வகுப்பார்கள்.

பலவீனமான ஒரு கட்சியின் தலைவர் சுயாதீனமான பொது வேட்பாளராக களமிறங்கி மற்றைய கட்சிகளிடமிருந்து கிடைக்கக்கூடிய ஆதரவின் மூலமாக மக்களின் அமோக ஆதரவைப் பெற்று ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறக்கூடியதாக இருக்குமேயானால், அது இலங்கை அரசியலில் முன்னென்றும் இல்லாத வகையின் ஒரு பெரும் அரசியல் சாதனையாகவே இருக்கும்!

ஜனாதிபதி தேர்தல் ஒன்றில் முன்னைய எந்த அரசியல்வாதியும் செய்திராத ஒரு புதிய பரிசோதனையில் இறங்கியிருக்கிறார் ஜனாதிபதி விக்கிரமசிங்க.

ராஜபக்சாக்கள் விக்கிரமசிங்கவை ஆதரிப்பார்கள் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், அவர்கள் தங்களது சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பிலான ஜனாதிபதி வேட்பாளரை உரிய நேரத்தில் அறிவிக்கப் போவதாகவும் அடிக்கடி கூறிக்கிறார்கள். அதற்கு மேலதிகமாக தங்களது ஆதரவுடனான வேட்பாளரே அடுத்த ஜனாதிபதியாவார் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். தங்களது அரசியல் எதிர்காலத்தை உறுதிசெய்வதற்கான வியூகத்தில் மாத்திரம் அக்கறை செலுத்தும் ராஜபக்சாக்கள் இறுதியில் எத்தகைய முடிவை எடுப்பார்கள் என்பது தெளிவில்லாமல் இருக்கிறது.

அதேவேளை, ராஜபக்சாக்களின் ஆதரவு விக்கிரமசிங்கவுக்கு கிடைக்குமானால் அது அவருக்கு அனுகூலமாக இருக்குமா என்ற இன்னொரு கேள்வியும் எழுகிறது. ஜனாதிபதி விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிடுவார் என்பது நிச்சயம். ஆனால் அவரைச் சுற்றியுள்ள [illegible] இருக்கிறது.

ஹர்ஷ டி சில்வாவுக்கு அச்சுறுத்தல்

## குற்றப் புலனாய்வு பிரிவிடம் விசாரணைகள் ஒப்படைப்பு



கொழும்பு, ஜுன் 09

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, தான் எதிர்நோக்குவதாகக் கூறிய அச்சுறுத்தல்கள் தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு வழங்கிய உத்தரவின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை விடுத்த ஹர்ஷ டி சில்வா, பல சவால்களுக்கு மத்தியில் தான் நிதிக்குழுவின் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டதாக கூறினார்.

தனக்கு அலுவலகம் இல்லை எனவும், சேவை செய்வதற்கு மூன்று பேர் மட்டுமே உள்ளதாகவும் கூறிய ஹர்ஷ டி சில்வா, சில சமயங்களில் தமது தனிப்பட்ட பணத்தில் அவர்களுக்குப் பணம் கொடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், நிலக்கரி விவகாரம், சீனி மோசடி, மத்திய வங்கியின் சம்பளப் பிரச்னைகள் குறித்து நிதிக் குழு தொடர்ந்தும் பேசி வருவதாகத் தெரிவித்த ஹர்ஷ டி சில்வா, இதனால் பல பிரச்னைகளைத் தான் எதிர்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

யாருடைய நலன்களுக்காக இப்படிச் செய்கிறார்கள் என்று கேள்வி எழுப்பிய அவர், தன் உயிருக்குப் பாதிப்பு ஏற்பட்டால் சபாநாயகருக்கும் பொறுப்பு உண்டு- என்றார். இந்த நிலையிலேயே ஹர்ஷ டி சில்வா எதிர்கொண்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் விசாரணைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களின்...

பிரேமதாஸவுக்கே. அதேவேளை சஜித் தலைமையில் வெகுவிரைவில் மெகா கூட்டணி மலரும்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதற்குப் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வந் துள்ளனர். இவர்களில் கள்ளவர்கள் அற்றவர்களை நாம் இணைத்துக் கொள்வோம்.

இந்த நாட்டில் உள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவு சஜித்துக்கே. பல சிங்களக் கட்சிகளும் சஜித்துக்கே ஆதரவு. எனவே, இவை அனைத்தும் இணைந்து பலமான அணி உருவாகும்.

இன்னும் மூன்று பூரணை (போயா) தினங்கள் முடிந்த பின்னர் சஜித் பிரேம தாஸவே ஜனாதிபதியாக இருப்பார்.இது உறுதி-என்றார். (அ)

## மோடியின்...

இந்திய பாராளுமன்ற தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சி கூட்டணி 300 முதல் 350 ஆசனங்களைக் கைப்பறக் கூடும் என எதிர்பார்த்தேன். எப்படி இருந்தாலும் பிரதமர் மோடியின் வெற்றி இலங்கைக்கு நன்மை பயக்கும்.

ஏனெனில் இந்தியாவில் ஸ்திரமான தொரு ஆட்சி இருக்கும்போது, இலங்கை தொடர்பான கொள்கையை மத்திய அரசே தீர்மானிக்கும்.

சிலவேளை மத்திய அரசு பலவீன மாகி, ஆட்சியமைக்க தமிழ் நாட்டின் உதவி தேவைப்படும்பட்சத்தில் இலங்கை தொடர்பான கொள்கையை தமிழகமே தீர்மானிக்கும். அப்போது தான் இரு நாட்டுக்கும் இடையிலான உறவில் தாக்கம் ஏற்படும். எனினும், மோடி வெற்றிபெற்றிருப்பது நல்லதே-என்றார்.

## இந்தியப்...

பிரதமர் பிரவிந்த் குமார் ஜக்நாத், நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹல், பூட்டான் பிரதமர் ஷெரிங் டோப்கே உள்ளிட்ட 7 அயல் நாடுகளின் தலைவர்கள் பங்கேற் கின்றனர்.

பிரதமரின் பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ள அண்டை நாடுகளின் தலைவர்களை அழைத்து உள்ளோம். இது "அயல் நாடுகளுக்கு முன்னுரிமை" கொள்கை மற்றும் "சாகர்" எனப்படும் பிராந்தியத்தில் அனைவருக்குமான பாது காப்பு மற்றும் வளர்ச்சிப் பார்வைக்கு இந்தியா அளித்த மிக உயர்ந்த முன்னுரி மையாக இது ஏற்பாடு செய்து உள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளி யிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் பதவியேற்பு விழா வில் பங்கேற்பதைத் தவிர, அயல் நாட்டுத் தலைவர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு ராஷ்டிரபதி பவனில் அந்த நாட் டின் ஜனாதிபதி திரௌபதி முர்மு அளிக் கும் விருந்திலும் பங்கேற்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## சம்பந்தனும்...

கருத்துரைக்கும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ச தமிழ் மக்களின் பிரச்னைக்குத் தீர்வு வழங்கப் பல தடவைகள் முன்வந்த போது சம்பந்தனும், சுமந்திரனுமே அதனைக் குழப்பியடித்தார்கள். அவர்கள் இருவரும் ராஜபக்சக்களுக்கு எதிரான சர்வதேச நாடுகளின் நிகழ்ச்சி நிரலில் செயற்படுபவர்கள்.

வெளிநாடுகளிடம் நிதியைப் பெற்றுக் கொண்டு தமிழினத்துக்குத் துரோகம் செய்த அவர்கள் இருவருக்கும் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்கள் பாடம் புகட்ட வேண்டும்.

அவர்களின் கட்சியும் அந்தத் தேர்த லில் படுதோல்வியடைய வேண்டும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலில் மொட்டுக் கட்சியே வெற்றியடையும். எனவே, தமிழ் மக்கள் எமது கட்சியின் பின்னால் அணிதிரள வேண்டும். தமிழ் மக்களின் பிரச்னைக்கு நாம் தீர்வு வழங்குவோம் - என்றார். (அ)

# அவசர தடுப்பூசி இறக்குமதி மூலம் ரூ. 36 கோடியே 89 இலட்சம் நஷ்டம்

## விளக்க அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்

கொழும்பு, ஜூன் 09

பக்டீரியா தொற்றுகளுக்குப் பயன் படுத்தப்படும் மெரொபெனம் தடுப்பூசி போதுமானளவு கையிருப்பில் இருக்கும் நிலையில் அவசர கொள்முதல் முறை யின் மூலம் 4 இலட்சத்து 50 ஆயிரம் தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்பட் டன. இதன் மூலம் நாட்டுக்கு ஏற்பட் டுள்ள நட்டம் தொடர்பில் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் விசேட கூற் றொன்றை முன்வைத்து அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மெரொபெனம் தடுப்பூசி கொள்வ னவு மூலம் நாட்டுக்கு 36 கோடியே 89 இலட்சத்து 50,000 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஒரு குப்பி 1075. 68 ரூபாய்க்கு கிடைத்தும் 1895. 50 ரூபாய்க்கு கொள்வனவு செய்துள்ள னர் .

தேவையான அளவு கையிருப்பில் இருக்கும் நிலையில் ஏன் அவசர கொள்முதல் மேற்கொள்ளப்பட்டது என்பது பிரச்னைக்குரிய விடயமாகும். இதனால், நாடு நஷ்டத்தை சந்தித் துள்ளது. எனவே, இந்த அவசர கொள் முதல் தொடர்பாக முறையான அறிக்கையை வெளியிட்டு விளக்கம ளிக்க வேண்டும்.

அத்துடன், இந்தத் தடுப்பூசி விநி யோகஸ்தர் தேசிய மருந்து ஒழுங்கு படுத்தல் ஆணையத்திடமிருந்து பதிவுச் சான்றிதழைப் பெற்று, குறுகிய காலத்துக்குள் அவசர கொள்முதல் மூலம் இந்த மோசடியை செய்திருப்ப தால், இது தொடர்பாக அறிக்கை யொன்றை சபையில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்- என்றார். (எ)

# முல்லைத்தீவில் இளைஞர் மீது தாக்குதல்; சந்தேக நபர் கனடாவுக்கு தப்பி ஓட்டம்

முல்லைத்தீவு,ஜூன09

முல்லைத்தீவு வற்றாப்பளை பகுதியி லுள்ள வீடொன்றினுள் நுழைந்த கும்பல் வீட்டிலிருந்த இளைஞனை தாக்கியதை தொடர்ந்து, சந்தேக நபரொருவர் கனடா நாட்டுக்கு தப்பித்துச் சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

கடந்த 3 தினங்களுக்கு முன்னர் வற்றாப்பளை பகுதியில் தமது வீட்டின் முன்பாக தாயுடன் நின்றிருந்த குழந்தை மீது மோட்டார் சைக்கிளொன்று மோதியதில் குழந்தை காயமடைந்தது.

விபத்துக்குள்ளான அக்குழந்தையின் வீட்டாருக்கும் மோட்டார் சைக்கிளில் சென்று விபத்தினை ஏற்படுத்தியதாக கூறப்படும் கனடா நாட்டிலிருந்து வருகை தந்த நபருக்கும் இடையே முன்னதாக முரண்பாடு இருந்துள் ளது.

இந்நிலையில், அவ்விபத்துச் சம்பவத் தையடுத்து, இன்று அதிகாலை 1 மணிய ளவில் வெளிநாட்டிலிருந்து வந்த நப ரின் தலைமையில் கும்பலொன்று வீடு புகுந்து இளைஞனை தாக்கிவிட்டு தப்பித்துச் சென்றுள்ளது.

அதனையடுத்து, அவர்கள் வருகை தந்ததாக கூறப்படும் மோட்டார் சைக் கிள் இலக்கத்தின் அடிப்படையில், முள்ளியவளை பொலிஸார் சந்தேக நபரின் வீட்டுக்குச் சென்று தாக்குதலின் போது பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளை கைப்பற்றியுள்ளனர். ஆனால், இத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

இது பற்றி பாதிக்கப்பட்ட தரப்பின ரின் உறவினர்கள் தெரிவிக்கையில், வெளிநாட்டிலிருந்து வந்த நபர் ஒரு கும்பலை வைத்து தாக்குதல் நடத்தி விட்டு, கனடா நாட்டுக்கு தப்பித்து சென்றதாகவும், இது ஒரு கொலை முயற்சி எனவும் இத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி தீர்வினை பெற்றுத்தர வேண்டும் எனவும் கூறியுள்ளனர்.

இந்த தாக்குதலில் காயமடைந்த வற்றாப்பளை பகுதியில் வசிக்கும் 27 வயது இளைஞன் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை யில் உள்ள பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## இன்று...

இன்று புதுடில்லி சென்றடைவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி விக்கிரமசிங்க தனது விஜ யத்தின் போது பல இருதரப்பு சந்திப்பு களிலும் பங்கேற்பார் என எதிர்பார்க் கப்படுவதாக ஜனாதிபதி அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

## ரணிலை...

முன்னர் இரண்டு தடவைகள் சந்தித்த பின்னர் இந்த சந்திப்பு இடம்பெற்றதா கவும் கூறப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர்களான ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகியோரின் தலையீட்டில் சஜித்துட னான சந்திப்புகள் இடம்பெற்றிருந்தன.

எவ்வாறாயினும், சம்பிக்க ரணவக்க, ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவதற்குத் தயாராக இருந்த போதிலும், சஜித் பிரேமதாச அது தொடர்பில் அக்கறை காட்டவில்லை என தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் ஜனாதி பதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி யின் தலைவரும், சமகால ஜனாதிபதியு மான ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதர வளிக்க சம்பிக்க ரணவக்க தயாராகியுள் ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, ஒருபகுதியாக ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற் படுவதால் ஏற்படும் முரண்பாடுகளை தீர்க்கும் நோக்கில், மேற்படி பசில் ராஜ பக்சவுடனான சந்திப்பு இடம்பெற்றதாக நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

ரணில் விக்கிரமசிங்கவுடன் நேரடி யாக இணையாது நிமல் லான்சா மற்றும் பலர் இணைந்து கட்டியெழுப்பிய புதிய கூட்டணியில் இணைந்து, அதன் ஊடாக ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க சம்பிக்க ரணவக்க முடிவு செய்துள்ளதாக கூறப்படுகின்றது. (அ)

# ஆறு மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 09

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஆறு மாவட்டங் களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, காலி, களுத்துறை, கேகாலை, மாத்தறை மற்றும் இரத்தின புரி மாவட்டங்களுக்கே இவ்வாறு மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட் டுள்ளது. (எ)

# மாணவியை காணவில்லை கண்டுபிடிக்க உதவிசெய்க



கண்டி, ஜூன் 09

கண்டி, கெல்லாபோக்க மடுல்கலை பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவர் கடந்த இரண்டு நாட்களாக காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஹரிவதனி என்ற உயர்தர வகுப்பு மாணவியே வெள்ளிக்கிழமை முதல் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள தாக அவரது சகோதரி தெரிவித்தார்.

இந்த நிலையில், குறித்த மாணவி தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் (+94 78 171 3389 டிலாந்தினி) என்ற இலக் கத்துக்கு அறிவிக்குமாறு தெரிவிக்கப்பட் டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# புலிகளின் முகாம் இருந்த இடத்தில் புதையல் தோண்டிய 5 பேர் கைது!

## பொலிஸ் அதிகாரி, ஆசிரியர் உள்ளடக்கம்

கிளிநொச்சி, ஜூன் 09

**விடுதலைப்புலிகளின் அன்பு முகாம் இருந்த பகுதியில் புதையல் தேடிய பொலிஸ் அதிகாரி, ஆசிரியர் உட்ட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

**இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் புதையல் தேடியவர்கள் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.**

கிளிநொச்சி மாவட்டத்தின் இராமநாதபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அழகாபுரி பகுதியில் விடுதலைப் புலிகளின் அன்பு முகாம் அமைக்கப்பட்டிருந்த பகுதியில் ஸ்கானர் மூலம் புதையல் தேட முயற்சித்த குற்றச்சாட்டிலேயே குறித்த கைது இடம்பெற்றுள்ளது.

இதன்போது 2 இலத்திரனியல் ஸ்கானர் இயந்திரங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது பொலிஸ் தலைமையகத்தில் கடமையாற்றும் பொலிஸ் பரிசோதகர், மற்றும் தென்னிலங்கை பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் கைதானவர்கள் இராமநாதபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# ராஜபக்சக்கள் தேர்தலுக்கு பயப்படுபவர்கள் அல்லர்!

## கூறுகின்றார் மகிந்த



கொழும்பு, ஜூன் 09

"எந்தத் தேர்தலுக்கும் ராஜபக்ஷக்கள் பயப்படுபவர்கள் அல்லர். நான் ஜனாதிபதியாக இருந்த வேளை தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தினேன். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் உரிய காலத்தில் தேர்தல்களை நடத்த வேண்டும். அவர் தவறு இழைக்கமாட்டார் என்று நம்புகின்றேன்."

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

"ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலைப் பிற்போடும் ஐக்கிய தேசியக் கட்சியின் யோசனைக்கு பொதுஜன பெரமுன ஆதரவு வழங்குமா?" - என்ற கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல்களைப் பிற்போட நாம் அனுமதிக்கமாட்டோம். குறிப்பாக பிரதான தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தியே தீர வேண்டும். எமது நிலைப் பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை. ஜனாதிபதியிடம் இதனைத் தெரிவித் துள்ளோம். இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடந்தே ஆக வேண்டும். மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் விரைவில் வெளிப்படுவார் - என்றார்.

# 4 வயது சிறுமியை தாக்கிய நபர்மீது சிறையில் கைதிகள் கடும் தாக்குதல்

அநுராதபுரம், ஜூன் 09

சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட 4 வயதுச் சிறுமி தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் சிறைச்சாலை கைதிகளால் தாக்கப்பட்டுக் காயமடைந்ததாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

வெலிஓயா பிரதேசத்தைச் சேர்ந்த குகுல் சமிந்த என்ற நபரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

இவர் 4 வயது சிறுமியைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் கடந்த 5 ஆம் திகதி வெலிஓயா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் அங்குள்ள கைதிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டுக் காயமடைந்த நிலையில் அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். (எ)

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழருக்கு ஆர்வமில்லை

## கூறுகின்றார் விக்னேஸ்வரன் எம்.பி.

கொழும்பு, ஜூன் 09

ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்களுக்கு காணப்படும் ஆர்வம் தமிழ் மக்களுக்கு இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல தரப்பினரதும் கருத்துக்களை பெற்றதன் பின்னரே தமிழ்ப் பொது வேட்பாளர் தெரிவுசெய்யப்படுவார் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (அ)

# பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 09

2023ஆம் ஆண்டுக்கான சாதாரணதர பரீட்சையின் விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் நேற்று ஆரம்பமானது.

விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணி நேற்றுமுன் தினம் ஆரம்பமாகவிருந்த போதிலும், நாட்டில் நிலவும் மோசமான வானிலை காரணமாக நேற்று வரை பிற்போடப்பட்டதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர குறிப்பிட்டார்.

கடந்த மே மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகிய பரீட்சை 15ஆம் திகதி வரை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரிடம் வாக்குமூலம் பதிவு

கொழும்பு, ஜூன் 09

பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்ஸ தாக்கப்பட்டமை தொடர்பில் இதுவரை பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வளாகத்தில் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கமைய, பாராளுமன்ற உறுப்பினர்களான சஹன் பிரதீப், மதுர விதானகே மற்றும் லலித் வர்ண குமார ஆகியோரிடமே வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

வாக்குமூலங்கள் தொடர்பில் விரைவில் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், தாக்குதலை மேற்கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட மஹிந்தானந்த அளுத்கமகேவிடம் இதுவரை வாக்குமூலம் பெறப்படவில்லை என பொலிஸார் கூறினர்.

கடந்த திங்கட்கிழமை மாலை, ஜனாதிபதி செயலக வளாகத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் பின்னர் இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவினால் நடத்தப்பட்ட தாக்குதலில் பாராளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்ஸவின் கால் உடைந்துள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ரணிலின் முடிவுக்காக காத்திருக்கும் மொட்டு!

கொழும்பு, ஜூன் 09

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்த பின்னரே மொட்டு கட்சியின் நிலைப்பாட்டை அறிவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அக்கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அவர் அந்த நிலைப்பாட்டை அறிவித்த பின்னரே எமது கட்சியின் தீர்மானம் எடுக்கப்பட்டு, அது கட்சி தலைவர் மகிந்த ராஜபக்சவால் அறிவிக்கப்படும்.

அதேவேளை, தேர்தலை முன்கூட்டி நடத்தியே எமது கட்சிக்கு பழக்கம். எனவே, தேர்தல்களை ஒத்தி வைக்கும் முயற்சிக்கு அதுரவு வழங்கப்படமாட்டாது, எத்தகைய யோசனைகள் வந்தாலும் உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற எமது கட்சியின் நிலைப்பாடு மாறாது - என்றார். (அ)



# காரை மோதித்தள்ளியது ரயில் தந்தையும் மகளும் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 09

ரயில் - கார் மோதி இடம்பெற்ற விபத்தில் தந்தையும் மகளும் ஸ்தலத்தில் பலியாகினர்.

நேற்றுச் சனிக்கிழமை காலை வத்தளை - என்டேரமுல்ல ரயில் கடவையில் பயணித்த காருடன் ரணில் மோதுண்டதில் காரில் பயணித்த 54 வயதுடைய தந்தையும், கொழும்பில் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்த 34 வயதுடைய மகளுமே ஸ்தலத்தில் பலியாகினர்.

என்டேரமுல்லையிலிருந்து வத்தளை நோக்கிப் பயணித்த காரும் பதுளையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலும் மோதுண்டதிலேயே இந்த விபத்து நிகழ்ந்தது.

இந்த விபத்து தொடர்பில் என்டேரமுல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# ரயில் சாரதிகள் தொடர்ந்தும் வேலை நிறுத்தப் போராட்டம்

கொழும்பு, ஜூன் 09

ரயில் சாரதிகள் ஆரம்பித்துள்ள வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்கின்றது.

கொழும்பிலுள்ள 2 ரயில்வே பணிமனைகளில் இருந்து ரயில்கள் இயக்கப்படவில்லையென லொகோ மோட்டிவ் ஒப்பரேட்டிவ் பொறியியலாளர்கள் சங்கத்தின் செயலாளர் எஸ்.ஆர்.சி.எம் சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

சம்பளம் வழங்கப்படாமை, பதவி உயர்வின்மை, ஆட்சேர்ப்பு இன்மை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து இந்த வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியல் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org